# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை


மார்ச் – ஏப்ரல் 2024

ஆண்டு 4 ▲ இதழ் 05

விலை 200/-



## எழுத்துலக ஆளுமை
## சிங்கை ச. அன்புவடிவு
## அறிமுகம்



# காதல்

மதிமயங்கும் விழியதனை
மங்கை நீ கொண்டதனால்
மாயங்கள் புரிந்தென்னை
மயக்கத்தில் இட்டுச் சென்றாய்

கண்ணுக்குள் ஒளிக்கீற்றாய்
காதல் தவம் செய்கின்றாய்
கார்கால வசந்தமென
கானமிசைத்துச் செல்வதேனோ

காதலில் கட்டுண்டு
தவிக்கும் வயதினில்
காலமென்னை பயணிக்க செய்கின்றது
கரம்பற்றி வாழ்வோடு வசந்தம் காண
கனவுலக மென்னை
இட்டுச்செல்கின்றது

காதல் ரகம் பலவுண்டு பூவுலகில்
கண்சிமிட்டும் நொடியினிலே களி கொண்டு
மெய்காதல் மெய்ப்பிக்க உறுதிகொண்டு
மணமேடை சென்றடைய வழியும் கண்டு

ஆதலினால் காதலியே என்னை நீ
ஆருயிராய் நேசித்திடு நிச்சயமாய் நான்
ஊரார் முன் என்மனைவி யாக்கிடுவேன்.
உன் கணவன் ஆக்கிடுவேன் நம்பிடு

**எஸ்.யூ.கமர்ஜான்பீபி (J.P)**
**வத்தளை**




# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் – ஏப்ரல் 2024

ஆண்டு 4 ▲ இதழ் 05

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**
DesignGlitz - Sri lanka (+94703770731)

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!

முகிழ்த்திருக்கும் 23வது இதழோடு உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி! மகளிர் தின சிறப்பிதழாக மலரும் இவ்விதழ் உங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கிறோம். மங்கையராய் மண்ணுலகில் அவதரித்து பல்வேறு பாத்திரங்கள் தரித்து, பொறுமையில் பூமாதேவியாய் திகழ்ந்து, அனைத்துத் துறைகளிலும் அசராமல் பணி புரிந்து, மாண்புறு மங்கையராய் மிளிரும் நம் பெண்களால் இப்பூவுலகே அழகு பெற, உலகின் இன்னுமோர் பகுதியில் பெண்கள் தம்மை முடக்கிக் கொண்டு சமயலறையே கதியென, கிணற்றுத் தவளைகளாக வாழ்வதும் அரங்கேறத் தான் செய்கிறது. மாற்றத்துக்காக காத்திராமல், அவர்களாகவே தன்னிலையுணர்ந்து முன்னேற முயற்சித்தால், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக அவர்கள் உருப்பெறவும் வாய்ப்புள்ளது. தம்மால் என்ன முடியுமோ, அந்தத் துறையில் ஈடுபாட்டுடன் செயல் பட்டால் அவர்களும் சாதிக்க முடியும் என்ற கருத்தை அவர்களுக்கு நாம் எத்தி வைப்போம். எழுத்தாளர்கள் என்ற வகையில் நாமும் நம்மாலான முயற்சியை இதற்காக மேற்கொண்டு, மாற்றங்கள் உருவாக வழி கோலுவோம்.

இம்மாதம் நன்மைகளை அள்ளிக் கொள்ளும் புனித ரமழான் தொடங்கவிருக்கிறது. முப்பது நாட்களும் மட்டில்லா பரிசில்களைப் பெற, ஐம்புலன்களையும் அடக்கி, சுவனத்தின் பாதைக்கு எம்மைத் தயார் படுத்துவோமாக!

எம்முடன் கைக்கோர்த்துப் பயணிக்கும் அத்தனை மாண்புறு மங்கையருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துகளுடன் முன்கூட்டிய ஈதுல் பித்ர் நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

-சித்தி வஃபிரா
ஆசிரியர்

# மாக்கோலம்

வண்ணம் வெள்ளை மாக்கோலம்
மகிழ வைக்கும் பூக்கோலம்
எண்ணம் முழுதும் வடிவங்கள்
எங்கும் பூத்த எழிற்கோலம்
மண்ணில் மலர்ந்த மகிழ்கோலம்
மலர்ச்சித் தந்த புதுகோலம்
கண்கள் வியப்பில் ஆழ்ந்திடுமே
கவனம் கொள்ள வைத்திடுமே

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு

---

## அவசரமான கோலம்

அவசரமான கோலம்
அழகிய இனியக் கோலம்
தவறென சொல்லாக் கோலம்
தமிழென உயர்ந்த கோலம்
குவிந்திடும் மனத்தின் கோலம்
குறைகளும் இல்லாக் கோலம்
தவித்திடும் உள்ளக் கோலம்
தனித்திடும் வண்ணக் கோலம்

**தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு**



## தள்ளாடிப் போகும் தாய்மை உணர்வுகள்.

உஷ்ணப் பெருமூச்சுக்களின் வெளியில்
உட்கார்ந்திருக்கும் ரேகை சித்திரமாயவள்
உள்ளத்தை அறுத்துக் கூறுபோட்ட
உக்கிர சோகங்களின் வலியிலே

ரீட்டா, பிரியதர்ஷினி, ஆசிபா
சேயா... ஆயிஷா... முனவ்வரா
முன்னும் பின்னுமாய் பட்டியல்...
இன்னும் இன்னும் நீண்டு கிடக்க ..

நீண்ட பெருமூச்சுக்களின் உஷ்ணத்திலே
மீண்டெழ முடியா பயத்திலே
மாண்டுப் போகும் தாய்மை யுணர்வு

உயிர் வலிக்க, உணர்வினிக்க
பெற்றெடுத்த பெண்ணைக் கண்டதுமே
தாய் கொண்ட கற்பனையோ ஆயிரம்

வளர்ந்து விட்ட பின்னே பெண்ணை
வெளியில் விடுவதா இல்லை
வீட்டிலேயே வைத்திடுவோமா?
படிக்க அனுப்புவதா?
பாதியில் நிறுத்துவதா?
வேலைக்கு அனுப்புவதா?
வேலைக்காகாது எதுவுமென இருப்பதா?

விடியலில் விடியலுக்காய் புறப்படுபவள்
வீட்டுக்கு வராமலேயே இரவெல்லாம்
விடிந்த பின்பு ஆற்றுக்குள்
சேற்றுக்குள் ஆழ்ந்து தோண்டிய
மண்ணிற்குள்

சோக நினைவுகள் சுருள் சுருளாக
சுயமாய் சுற்றி வரும் ஆகாய வெளியில்
ஆசிபா ஆயிஷா முனவ்வரா முகங்கள்
முன்னாடி முத்துக்களாய் ஆட
தள்ளாடிப் போகுதே.
தாய்மை உணர்வுகள்...

**அஸ்மா தீன்**
கம்பளை



# எழுத்துலக ஆளுமை

# சிங்கை. ச. அன்புவடிவு

## அறிமுகம்

இந்த இதழை அலங்கரிக்கும் ஆளுமையாக சிங்கப்பூரில் வசித்து வரும் ச.அன்பு வடிவு எனும் பன் முகத் திறமைகள் கொண்ட ஒரு எழுத்தாளரை அறிமுகம் செய்கி றோம். பட்டுக்கோட்டையில் பிறந்த இவரின் தாய் க.பானுமதி. தந்தை வ.கணேசன் (எ) பாரி

வாழ்க்கை இணையர் மா.சந்தி ரேசன். தொழில் நிர்வாகி, (சுய தொழில்)

**பொழுதுபோக்கு:**

கவிதை, சிறுகதை, நாவல், கோலம் Ansajase.asia (CEO) வாகப் பணிபுரிகிறார்.

**தமிழ்ப்பணிகள் :**

தற்போது மக்கள் மனம், கோப் பிக் கடை, பாடலாசிரியர் வாசன் பாடல்கள், கவிதா அத்தையின் குட் டீஸ் கதைகள், மன்னை மீடியா, ACE INTERNATIONAL, ஆகியவற்றின் இணையதள விளம்பரங்கள் தொண் டாகச் செய்து வருகிறார்.

பாரதி கண்ணா பாவலர் குழுமம் மற்றும் ஐக்கியத்தமிழ் கவிஞர் மன்றம் ஆகியவற்றின் இணை நிறுவனர், தொகுப்பாளர், நடுவர், நெறியாளர், சான்றிதழ் தயாரிப்பா ளராகவும், முத்தாசன் கவிமன்றம் மதிப்பீட்டாளராகவும், செந்தமிழ்ச் சாரலில் நிர்வாகி, அட்மினாகவும், தமிழன் கவிதாலயத்தில் மதிப்பீட் டாளர், நிர்வாகியாகவும் தங்கமீன் கலை இலக்கிய வட்டத்தில். அட்மி னாகவும் செயற்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது.

தமிழ்நெஞ்சம் திங்களிதழ் பிரான்ஸ், சிங்கப்பூர் திங்களிதழ் இதழ், மக்கள் மனம், தேக்கா எக்ஸ்பிரஸ், மின்னிதழ், புதுவரவு அச்சிதழ் போன்றவற்றில் எழுத்தாள ராக முத்திரை பதித்துள்ளார்.

‘தேனருவி’ வானொலியில் ‘நிலா காயும் நேரம்’, ‘ஞாபகத் தூறல்’ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுள்ளார்.

கவியுலகப் பூஞ்சோலை குழு மம் சார்பாக நடந்து முடிந்த ‘சுரதா 100’ உலகச் சாதனை முயற்சியில் கவியரங்கத்தில் கலந்து கொண்டு பாராட்டுச் சான்றிதழ் பெற்றிருக் கிறார்.

தமிழோடு உறவாடும் கவிப் பாவார்களை சந்திரோதயம் குழு மத்தின் திறனாய்வுக் கவிஞர்களில் ஒருவராக திருமதி. ச.அன்பு வடிவு அவர்களை மதிப்பீடு கண்டது.

2020 ஆண்டு நடைபெற்ற தமிழ் மொழி விழா நிறைவு நிகழ்ச்சி கவியாடும் முன்றில் தமிழகக் கலாச் சார மற்றும் இலக்கிய அமைச்சர் கலந்து கொண்ட மெய்நிகர் நிகழ்ச்சி இவர் எழுதியிருக் கிறார்.

நெதர்லாந்து சூரியத் தொலைக் காட்சி உலகச்சாதனை நிகழ்வில் இவரது விளம்பர நிறுவனம் சார் பாக முப்பெரும் நிகழ்ச்சிகள் ஏற் பாட்டாளராகவும், பொறுப்பாளரா கவும் பணிகள் செய்திருக்கிறார்.

வளரி பன்னாட்டுப் பெண்கள் அமைப்பின் சிங்கப்பூர் முகவரா கவும், வளரி அச்சிதழ் துணை யாசிரியராகவும் கடமை புரிந்து வருவதும் பாராட்டுக்குரியது.

சிதறிய விண்மீன் துண்டுகள், மகடூஉ 100, பெண்ணில் பூத்த பெருவனம், நோபல் உலகச் சாதனை (நவம்பர் 2023) போன்ற தொகுப்பு நூல்களில் கவிதைகள் எழுதியுள் ளார்.

மேலும், பெரும்புலவர் செம்மங் குடி துரையரசத் தொண்டைமான் பவளவிழா பா மாலை 100 கவி ஞர்களில் ஒருவராகவும், சரி விகித சொற்பந்தி (நவீன நாலடியார்) 400 சங்கப் பாடல் 400 புதுக்கவிதை தொ குப்பிலும் (மஞ்சிகை பதிப்பகம்) எழுதியுள்ளார்.

**இவரின் நூல்கள்:**




‘அன்பின் நடையில் அடையாளம்’, ‘அகத்தில் எழுந்த அலை’ (வெண்பா தொகுப்பு)

**பெற்ற விருதுகள் :**

உலகப் பாவலர் தமிழன்னைத் தமிழ்ப்பேரவை, தமிழறிஞர். எழுத் தாளர். சா.கந்தசாமி நினைவு விருது.

தமிழன் கவிதாலயா குழுவின் ‘பாரதியார் நினைவு விருது’ ‘ஆசு கவி விருது’ (கவியுலகப் பூஞ்சோலை குழுமம்), ‘பாரதி கண்ணா’ (பாவலர் பூஞ்சோலை குழுமம்), ‘பொற்றமிழ் விருது’, ‘கபிலர் விருது’, ‘கலையுலகப் பேராண்மை விருது’.

கிராமியக் கலைகள் வளர்ச்சி மற் றும் நல அமைப்பு அறக்கட்டளை, உலகத்தமிழ்ச் சங்க இணைப்பு, சர்வதேச கிராமியக்கலை விருதுகள் 2022 ‘சிறந்த வாழ்நாள் சாதனை யாளர் விருது’

இவருடைய இந்த வளர்ச் சிக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் மற்றும் ஒவ்வொரு குழுவிலும் இவரோடு பயணித்தவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

இவரின் பணிகளை சிறப்பாகத் தொடர்ந்து வெற்றிவாகை சூட முத்தமிழ் கலசம் சார்பாகவும் நாமும் வாழ்த்துகிறோம்.

## வீசுந்தென்றல் மாசாகலாம்

வீசுந்தென்றல் மாசாகலாம்
நாளை காற்றுகூட காசாகலாம்
பிராணவாயு பேரம் பேசி
விற்கும் சந்தை உருவாகலாம்

காடெல்லாம் நாடாகலாம்
மரமெல்லாம் உரமாகலாம்
சனத்தொகை அடர்த்தியாகி
அடுக்குமாடி அடுக்கப்படலாம்

கழிவுகள் அதிகமாகி
எரிப்பதே வழியாகலாம்
விளைநிலம் விலைபேசி
விற்பனைக்கு விடப்படலாம்

வாகனங்கள் வாசல் வந்து
வாயுக்கள் மாசாகலாம்
தொழிற்சாலைகள் உருவாகி
கழிவுகள் வெளியாகலாம்

நாடுகள் போட்டி போட்டு
அணுவுலைகளை உருவாக்கலாம்
நட்டமரம் வெட்டப்படலாம்
பட்டமரம் பற்றப்படலாம்

புவியின் நுரையீரலுக்கு
புற்றுநோய் வந்தாகலாம்
அஞ்ஞானம் மேலாகலாம்
விஞ்ஞானம் பாழாகலாம்

நுரையீரல் செயலிழந்து.
உயிரெல்லாம் பலியாகலாம்
கடைசியிலே காலனாக
கழிவுக்காற்றே அழிவு தரலாம்

அறிவு கொண்டு சிந்தித்தால்
அழிவுகளை தடுத்துக்கலாம்
வருங்கால சந்ததிக்கும்
வாழவழி செய்து தரலாம்.

**கோ. தனுசன்**
**மட்டக்களப்பு**

## தென்றல்

தலை குனிந்து
நிற்கும் நெற்கதிரை
தட்டி எழுப்பிச் செல்கிறதே
இத் தென்றல்

கழனியில் உழைத்த
உழவனின் வியர்வை
சூரியனைக் கண்ட
பனித்துளியாய்
கரைந்து விடச் செய்கிறதே
இத் தென்றல்

இன்று மலர்ந்தப் பூக்களுக்கும்
நாளைய மொட்டுகளுக்கும்
வாழ்த்துச் சொல்லி
வருடிச் செல்கிறதே
இத் தென்றல்


சாதி மதம் கடந்து
நானும் வருகிறேன்
தேகங்களை வருடுகிறேன்
இதயங்களைத் திருடுகிறேன்.

பல இதயங்களைத் திருடிய
இவனோ இயற்கையின்
செல்லக் குழந்தை

**ச.சத்தியபானு**

# மருத்துவம்

Dr. ஜலீலா முஸம்மில் (MBBS/ SL)
ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்



வட்டக்கடி என பொதுவாக சொல்லப்படும், பங்கசுக்களின் தொற்றுக்களால் ஏற்படக்கூடிய ஒரு வகையான தோல் நோயே படர்தாமரை. இது மற்றவர்களுக்கு எளிதில் பரவக்கூடிய ஒரு தொற்று நோயாகும். இதை ஆரம்பத்திலேயே சரிசெய்து விட்டால் பிரச்சினை இல்லை. படர்தாமரை ஒருவருக்கு உடலின் தலை, கால், அக்குள், இடுப்பு (அரை) மட்டுமல்லாது எந்த பகுதியில் வேண்டுமானாலும் வரலாம். அதாவது தோல் மடிப்புள்ள மறைவான பகுதிகளில், வியர்வை தங்கும் இடங்களில், கூடுதலாக உரசப் படும் சருமங்களில் இத் தொற்று ஏற்படலாம்

இந்தியா, இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளில் வசிப் போருக்குத் தோலில் தோன்றும் நோய்களுள் 'ஃபங்கஸ்' (Fungus) என அழைக்கப்படுகிற காளான் படை நோய்கள் வருவது அதிகம். மக்கள் தொகை பெருக்கம், பொதுச் சுகாதாரக் குறைவு, உடலில் அதிகம் வியர்ப்பது போன்ற காரணங்களால் பங்கசுத் தொற்றுக்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவோ மற்றும் மறைமுகமாகவோ எளிதில் பரவும் வாய்ப்பு ஏற்படுகிறது.



தோலில் ஏற்படுகிற பங்கசுத் தொற்று நோய்களில் முதலிடம் பெறுவது தேமல் நோய். 'மலேசே சியாஃபர்ஃபர்' (Malassezia furfur) எனும் பங்கசுக் கிருமியால் இந்தப் பாதிப்பு உண்டாகிறது. இது குழந்தைகள் முதல் முதியோர்வரை எவரையும் தாக்கலாம் என்றாலும், நடைமுறையில் இளம் வயதினரையே அதிக அளவில் பாதிக்கிறது.

மார்பு, முதுகு, கழுத்து, முகம், தோள், கை, கால் போன்ற இடங் களில் தோல் சிறிது நிறம் குறைந்து அல்லது அதிகரித்து மெல்லிய செதில்களுடன் வட்ட வட்டமாக, திட்டுத்திட்டாகப் படைகள் போ

ன்று சிவந்து காணப்படுவது இந்த நோயின் முக்கிய அறிகுறி. தேமல் படையைச் சுற்றி ஓர் எல்லைக் கோடு காணப்படுவதும் சிறிதளவு அரிப்பு ஏற்படுவதும் இயல்பு.

வியர்வை அதிகம் சுரப்பவர்களுக்கும் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் ஸ்டீராய்டு (Steroids) மாத்திரைகளை நெடுங்காலம் சாப்பிட்டு வருபவர்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் தேமல் அடிக்கடி தொல்லை தரும்.

இன்னும் சுய சுத்தம் குறைவாக உள்ளவர்களுக்கும், உடல் பருமன் கூடியவர்களுக்கும், ஊட்டச்சத்துக் குறைந்தவர்களுக்கும், மனித நெருக்கடி மிகுந்த இடங்களில் வசிப்போருக்கும், தண்ணீரில் அதிகம் புழங்குபவர்களுக்கும் பங்கசுத் தொற்றுக்கிருமிகள் பாதிக்கின்ற வாய்ப்புகள் அதிகமாகும். இத் தொற்று விரைவாக பரவக்கூடிய வாய்ப்பு அதிகம் வியர்ப்பவர்கள் ஆடைகளை பகிர்ந்து அணிபவர்கள், நோயெதிர்ப்பு குறைந்தவர்கள், படுக்கையை மற்றும் துவாய்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் போன்றவர்களுக்கு இருக்கும்.

இந்தக் கிருமிகள் மண்ணிலும், மனிதர்கள் மற்றும் விலங்குகளிடத்திலும் வசிக்கக்கூடியவை. எனவே, பங்கசுத் தொற்று நோயுள்ள ஒருவருடன் நெருங்கிப் பழகும்போதும், வீட்டில் வளர்க்கப்படும் நாய், பூனை



போன்ற செல்லப் பிராணிகளிடமிருந்தும் இது பரவ வாய்ப்புள்ளது. அசுத்தமான இடங்களில் குழந்தைகள் விளையாடும் போது மண்ணிலிருந்து கிருமிகள் பரவி நோய் வருவதுண்டு.

வட்டக்கடி நோய்க்கு 'டீனியா தொற்று' (Tinea infection) என்பது மருத்துவப் பெயர். இதை ஏற்படுத்தும் கிருமிகள் பல. அவற்றுள் மைக்ரோஸ்போரம், டிரைகோபைட்டன், எபிடெர் மோபைட்டன் முக்கியமானவை. முதல் இரண்டு கிருமிகள் தோலையும் முடியையும் பாதிக்கின்றன. மூன்றாவதாகச் சொல்லப்பட்ட கிருமி தோலையும் நகங்களையும் பாதிக்கக்கூடியது.

நோயின் வகைகள் இந்தக் கிருமிகள் பாதிக்கிற இடத்தைப் பொறுத்து நோயின் பெயர் மாறும். தலைத் தொற்று, முகத் தொற்று, உடல் தொற்று, தொடை இடுக்குத் தொற்று, நகத் தொற்று, பாதத் தொற்று என்று படர்தாமரையில் பரவும் இடங்களைப் பொறுத்துப் பல் வேறு வகைகள் உள்ளன.

### தலைத்தொற்று (Tenia capitis)

பெரும்பாலும் சிறுவர், சிறுமிகளுக்கு இது வருகிறது. இது வருவதற்கு முக்கியக் காரணம், சுயச் சுத்தக் குறைவு. சரியாகச் சுத்தப்படுத்தாத கத்தியால் தலைச் சவரம் செய்யும்போது, இந்த நோய் பரவுகிற வாய்ப்பு அதிகம். மேலும் இந்த நோய் உள்ளவர் பயன்படுத்திய சோப்பு, சீப்பு, ஆடைகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்வதன் வழியாகவும் இது பரவுவதுண்டு.

இந்த நோய் பாதிப்புள்ளவருக்குத் தலையில் ஆங்காங்கே சிறிதளவு முடி கொட்டியிருக்கும். வட்ட வட்டமாகத் தலையில் சொட்டை விழுந்திருக்கும். அரிப்பு எடுக்கும். சிலருக்குச் சீழ்க் கொப்புளங்கள் ஏற்பட்டிருக்கும்.



### முகத்தொற்று

இந்த நோய் மூக்கு, கன்னம், தாடி வளரும் இடம் என முகத்தில் எங்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். பெரும்பாலும் இது சுத்தப்படுத்தப்படாத கத்தி, பிளேடு போன்றவற்றைப் பயன்படுத்தி முகத்தைச் சவரம் செய்யும் போது பரவுகிறது.



முகத்தில் வட்ட வட்டமாகப் படைகள் தோன்றுவதும், தாடி வளர வேண்டிய இடங்களில் முடி இல்லாமல் இருப்பதும் அரிப்பு எடுப்பதும் இதன் முக்கிய அறிகுறிகள். தேமலுக்குச் சொன்ன சிகிச்சையே இதற்கும் பொருந்தும். உபயோகித்த பிளேடு அல்லது நன்றாகக் கிருமி நீக்கம் செய்யப்படாத கத்தியால் முகத்தைச் சவரம் செய்வதால் இந்தநோய் பரவுகிறது.

### உடல் படர்தாமரை Tinea Corporis

உடல் படைக்கு இன்னொரு பெயர் படர் தாமரை (Ring worm). பொதுமக்களிடம் மிகச் சாதாரணமாகக் காணப்படும் நோய் இது. உடல்பருமன் உள்ள பெண்களிடம் இது அதிகம் காணப்படுகிறது. முக்கியமாக, வீட்டு வேலை செய்யும் பெரும் பாலான பெண்களுக்கு இடுப்பைச் சுற்றி, இந்தத் தொற்று இருக்கும்.

இவர்களுக்கு அதிகமாக வியர்க்கும் என்பதாலும், ஈரம் அதிகம் இருக் கும் இடங்களில் அதிக நேரம் பணி செய்வதாலும் கை, கால்களில், ஈரத்தில் இருக்கும்

காளான் கிரு மிகள் எளிதாகத் தாக்கி நோயைத் தருகின்றன. வீட்டில் ஒருவர் உடுத்திய ஆடைகள், உள்ளாடை போன்றவற்றை அடுத்தவர் உடுத்தும் போது, இது மிக எளிதில் பரவிவிடுகிறது.



### பாதத்தொற்றுTinea Pedis/ Athlete's foot

இது ஆண்களுக்கு அதிலும் இளைஞர்களுக்கே பெரும்பாலும் தொற்றக்கூடியது.

### அரைத்தொற்று Tinea Cruris

அரைப்பகுதிகளிலும் பாலங் கங்களிலும் ஏற்படக்கூடியது.

### நகத்தொற்று Tinea Unguium

நகங்களில் தொற்று ஏற்படும் போது தடிப்படைந்தும் உருமாற்றம் பெற்றும் நிறமாற்றம் அடைந்தும் செதில்கள் உதிரக்கூடியதாகும் வலிமிக்கதாகவும் காணப்படும்.

### நிவாரணம்

இன்றைய நவீன மருத்துவத்தில் தேமலைப் போக்கப் பலதரப்பட்ட களிம்புகள், வியர்வையை




உறிஞ்சும் மருந்து கலந்த பவுடர்கள் (Candi), மாத்திரைகள், நடைமுறையில் உள்ளன. தினமும் இரு வேளை குளித்து, தோல் மருத்துவரின் ஆலோசனைப்படி இந்தக் களிம்பு/ பவுடர்களில் ஒன்றைச் சில வாரங்களுக்குத் தொடர்ந்து பூசி வந்தால், படர் தாமரை விடை பெற்றுக் கொள்ளும். மருத்துவர் சொல்லும் கால அளவுக்குத் தேமலுக்கான மாத்திரைகளையும் உள்ளெடுத்தல் வேண்டும். அப்போதுதான் அது மறுபடியும் வராது.

இதை இலகுவாக் குணப்படுத்த பின் வரும் சுகாதார ஆலோசனைகளைப் பேணவும்.

1 . தினமும் இரு முறை தொற்று நீக்கி சவர்க்காரம் கொண்டு குளிக்கவும்.

2 . ஒரு முறை கழற்றிய ஆடைகளை மீண்டும் கழுவாமல் அணிய வேண்டாம்.

3 . சுயசுத்தம் பேண வேண்டும்.

4. மற்றும் மேலை த்தேய கழிப் பறை பாவிப்பவர்கள், தொ டைகளில் இருக்கும் சிரங்குகளில் அவதான மாக இருக்க வேண்டும். ஏனெனில் வீட்டில் உள்ள மற்றவர் களுக்கும் பரவ அதிகமான வாய்ப் புண்டு. இதை தவிர்க்க கழிப்பறை பாவித்த பின் இருக்கைகளை நன்கு தண்ணீரால் கழுவி விடவேண்டும்.

5 . மற்றும் உங்கள் ஆடைகளை, துடைக்கும் துணியை, படுக்கையைப் பகிர வேண்டாம் .

இதற்கு நிவாரணமாகப் பயன்படுத்தக்கூடிய மருந்துகள் பின்வருமாறு..

**Cream வகைகள்**

1 . Miconazole cream
2 . Clotrimazole cream
3 . Terbinafine cream

**குளிசை வகைகள்**

1 . Griseofulvin 500 mg
இரவு சாப்பாட்டின் பின் குறைந்தது 2 வாரங்களுக்கு.
2 . Fluconazole 150 mg
வாரத்துக்கு ஒரு முறைப்படி 4 வாரங்களுக்கு.

இவற்றில் ஏதாவது ஒரு கிரீமையும் இரு மாத்திரைகளையும் பாவித்து வந்தால் படர் தாமரையை முற்றிலும் குணப்படுத்த முடியும் . அத்துடன் ஆரோக்கியமான சுகாதார ஆலாசனைகளையும் கட்டாயம் கடைப் பிடிக்க வேண்டும் .

இவ்வாறான தொற்று நோய்கள் பற்றி அறிந்து கொண்டு அவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும். ஏனெனில் நாளாந்த வாழ்க்கையில் இவ்வாறான தொற்றுகள் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. சிகிச்சை பெற்றுக் கொள்ளாவிடில் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் அது பரவி சீழ், கொப்புளங்கள், புண்கள் ஏற்பட்டு இரத்தத்தினுள் கிருமித் தாக்கத்தை ஏற்படுத்தி விடும். அதன் பின்னர் பாரதூரமான விளைவுகளை தொற்று நோயாளிகள் சந்திக்க நேரிடும். எனவே இத்தொற்று நோய் பற்றி அறிந்து சரியான சிகிச்சை பெற்றுக் கொள்வோமாக.


நன்றி!

## நானும் ஒரு....

வீதியில் விளையாட்டு
பந்தொன்று வந்து
பட்டதென் ஜன்னலில்
சில்லுகளாய் சிதறின
சில துண்டுகள்
அம்மா வந்து
ஆட்டம் போட்டாள்.
எட்டிப்பார்த்தேன்
குட்டிப்பையன்தான்
கணப்பொழுதில் கண்ணுக்குள்
வந்தார் ஜயசூரிய.
‘பரவாயில்லை விடும்மா’
என்றேன்
‘பைத்தியம்’ என்றே
பாராட்டிச் சென்றாள்
பைத்தியமாக இருப்பதுகூட
பரவாயில்லை
எனத்தோன்றுகிறது
இப்போது

ஜுவைரியா சதீக்
தம்பாலை.

# புது வசந்தம்



## கிண்ணியா சபீனா - இலங்கை

மூன்று மாதங்களாகச் சங்கர் வாத்தியா ருக்குப் பாலும் கசந்தது. படுக்கையும் நொந் தது.கோலக் கிளி மொழியும் செவியில் குத் தல் எடுத்தது.

நாற்பது வருடங்கள் கண்மணி என் னோடு வாழ்ந்தவள், என்னை விட்டு மறைந்து விட்டாள்! இனி எனக்கு யார் துணை? என்று ஏங்கித் தவித்தார். அவர்! மகன் கண்ணனும் மனைவி மக்களை விட்டுட்டு, அம்மாவின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து, இன்னும் போக வில்லை. அவன் அப்பாவை மிகவும் கண் ணியமாகக் கவனித்தான்.

‘ கண்ணனும் எத்தனை நாள் தான் மனைவி மக்களை விட்டுப் போட்டு இங்க இருப்பான்' என்று எண்ணிய சங்கர் மாஸ் டர் பெரு மூச்சு ஒன்றினை விட்டார். ‘அப்பா நான் எல்லாத்தையும் கதைச்சு முடிச் சிட்டேன்.அவையள் போம் தந்து விட்டி னம். நீங்க விரும்பினால் நாளைக்கே போகலாம் அப்பா’ என்றான் கண்ணன். தனது அவசரத்துக்காக. அது சரி தம்பி என்னை அவையள் நல்லாப் பாப்பின மோ? உங்க அம்மாவும் என்னை விட்டுட்டுப் போயிட்டாளே கண்மணி! இனி என்னோட சந்தோசமெல்லாம் போயிட்டுதடா!’ என்று சொல்லிக் கண் ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த கண் ணனும் அப்பாவுடன் சேர்ந்து அழுதான்.

மனைவியை இழந்த ஒவ்வொரு ஆண் மகனுக்கும் இந்த நிலை தானோ என்ற பயத்துடன் சிந்தனையில் மூழ் கினான்.

வீட்டுக்கு அஞ்சாறு பிள்ளைகள் இருந் தால் எப்படியும் ஒரு பிள்ளையாவது பெத்த வங்களைப் பார்க்கும். ஒற்றைப் பிள்ளை நானும், நாட்டை விட்டு வெளியேறிட் டேன். அம்மாவும் போய்ச் சேர்ந்துட்டா’ என்ற வேதனையைக் காட்டிக் கொள் ளாமல் சுதாகரித்துக் கொண்டு கதைத் தான். ‘அப்பா! நீங்க ஒன்றுக்கும் கவலைப் பட வேண்டாமப்பா! கொஞ்ச நாளைக்கு அங்க இருங்கோ! நான் கனடா போயிட்டு, அங்கிருந்தே உங்களை நான் அங்க எடுப் பேனப்பா! என்னை நம்புங்கப்பா! நான் உங்களைத் தனியே விட மாட்டேனப்பா!’ என்று கதறியழுதான் கண்ணன். தகப் பனைக் கட்டியணைத்துக் கொஞ்சினான்.

பெற்றெடுத்த பிள்ளையின் பாச மழையில் நனைந்து கரைந்து போனார் சங்கர் வாத்தியார்.நேரம் போனதே அவர்க ளுக்கு விளங்கவில்லை. அடுத்த நாள் காப் பகம் போவதென்ற முடிவுடன் இருவரும் உணவருந்தி விட்டுப் படுக்கைக்குச் சென் றனர்.

புலர்ந்தது பொழுது. எல்லோரும் விடிய லின் ஒளியில் மகிழ்ந்தனர். கட்டிலில் புர ண்டு புரண்டு கிடந்த வாத்தியாரோ, இனி என் உலகம் இருண்டிடுமோ எனும் வேத னையுடன் விழித்தெழுந்தார். காலைக் கடன்களை முடித்து விட்டுத் தன் வீட்டை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு வர வெளி யே போனார். ‘இனியெங்கே இங்கெல் லாம் வரப் போறன்! நானும் கண்மணியும் மகிழ்ந்திருந்த அந்தநாட்கள், சண்டை போட்ட நாட்கள். அவளோட விளையாடிய நாட்கள் எல்லாம் நினைவினில் வந்து நிழலாடியது. எல்லாமே கடந்து போயிற்று.

கண்மணி! எல்லாவற்றையும் நினை வாக மட்டும் தந்து விட்டு நீ போய் விட்

டாயே கண்மணி! நான் மட்டும் இங்கே என்ன தான் செய்யப் போறேன். என்னையும் உன்னுடன் கூட்டிப் போக மாட்டாயா? நான் மட்டும் தனியே எப்படி வாழப் போறேன்?' என மனதிலே பேசிக் கொண்டு திரிந்தார் வளவு முழுவதும் .

'அப்பா இந்தாங்கப்பா சாப்பிடுங்க! சாப் பிட்டுப் போட்டு வெளிக்கிடுவோம்! வாகனமும் வந்திட்டுது.' என்று அவசரப்படுத்தினான் கண்ணன். உணவு ண்ட பின்னர், தேவையானவற்றைப் பயணப் பையில் எடுத்து வைத்தான் கண்ணன். தான் குடியிருந்த கோயிலான தனது வாழ்விடத்தை விட்டுக் கண்ணீருடன் வெளியேறினார் வாத்தியார்.

இருவரும் காப்பகம் நோக்கினர்! அவ்விடத் தைச் சென்றடைந் ததும், மகனின் கையைப் பிடித்து மெல்ல இறங்கினார் வாத்தியார். அங்கோர் ஆசனத்தில் அவரை அமர்த்தி விட்டு, காப்பகத்திலே சேர்க்கும் பணிகளை முடித்துக் கொண்டான் கண்ணன்.

மகனின் கையைப் பற்றிக் கொண்டவர், 'கண்ணா' என்றழைத்துக் கண்ணீர் சிந்தினார். அவனும் பிரிவுத் துயரினைத் தாங்காது தவிப்புடன் நின்றான். பின்னர் சமாளித்துக் கொண்டவன், 'இருங்கப்பா நான் ஈவ்னிங் வருவேன். உங்களுக்கு ஏதாவது வேணுமா?' என்று கேட்டான்! 'இல்லையில்லை எனக்கு இருக்கிறது போதும் கண்ணா! நானிங்குத் தனியே என்ன செய்வேன்?' என்றார் ஏக்கத்துடன். 'நீங்க கொஞ்ச நாளைக்கு இருங்கப்பா' 'நான் என்னோட வைத்துக் கொள்வேன். 'அங்கு போய் அதற்கான வேலைகளைச் செய்து விட்டு உங்களை அங்கு எடுப்பேன்' 'என்று கூறிப் பிரிய மனமில்லாது பிரிந்து நடந்தான்.

கண்ணனை வைத்த கண் வாங்காமலே பார்த்துக் கொண்டிருந்தார் சங்கர் வாத் தியார்.

அவருக்கான இடம், படுக்கை எனத் தேவையானவை எல்லாம் கொடுக்கப்பட்டது. அவருக்கான கட்டிலில் அமர்ந்து கொண்டார். அவருக்கு உணவும் வழங்கப்பட்டது. அவரால் சாப்பிட முடிய வில்லை.

மகனின் வருகையை எதிர் பார்த்துச் சிறு பிள்ளை போல் காத்தி ருந்தார். அன்று பின்னேரம் அப்பாவைப் பார்க்க மகனுக்கு, எவ்வளவு தெண்டித்தும் வர முடியா மல் போய்விட்டது. மகனின் வரவுக்காகக் காத்திருந்தவர் மிகவும் மன முடைந்து போனார். படுத்துக் கொண்டிருந்த அவ ரால் படுக்கையை விட்டு அசைய இயலவி ல்லை.

அன்றிரவு, சரியான காய்ச்சல் அடிக்கத் தொடங்கியது. உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டார்.

விடிந்ததும் அன்றைய வாணி காப்பகத்தின் பேசுபொருள் 'நேற்றுப் புதி தாக வந்தவருக்கு சீரியஸாம் செத்தி டுவாராம்' என்பதாகக் காணப்பட்டது.

இப்படித்தான் உலகம் பேசும். என்ன தான் செய்வது. ரெண்டு நாள் கழித்து மீண்டும் காப்பகம் வந்த சங்கர் வாத்தியார், மெல்ல மெல்ல உடல் தேறத் தொடங்கினார்!

தனது நண்பரான தங்கத்துரை வாத்தியாரின் நினைவும் அவருக்கு அடிக்கடி வந்து கொண்டே இருந்தது! அவரின் பிள்ளைகள் இருவரும் லண்டனில் இருக் கிறார்கள். தங்கத்துரையாரின் மனைவி காலமானதும், அவரின் பிள்ளைகள் வாத் தியாரை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டுப் போய் விட்டார்கள். அங்கு சேர்ந்து ஒரு மாத காலத்துக்குள் அவரும் போய்ச் சேர்ந்து விட்டார். அவரின் இறுதிக் கிரியைகளுக்குக் கூட பிள்ளைகள் வரவில்லை. அந்த சோகம் இவரையுந்தான் அன்று வாட்டியது.

உயிர் தந்து, பெற்று வளர்த்துப் பாராட்டிச் சீராட்டி ஏணியாக ஏற்றி விட்ட இனிய வர்களை எறிந்து விட எப்படித் தான் மனசு வருகின்றதோ? கையைப் பிடித்துக் கொண்டு போய் பள்ளியில் சேர்த்து விட்ட வர்களைக் கையைப் பிடித்துக் கொண்டு போய் இல்லத்தில் சேர்த்து விடும் கலா சாரம் இன்று மேலோங்கிச் செல்கிறது என்று வருத்தப்பட்டுக் கொள்வார்! அதே நிலைதான் தனக்கும் வந்துள்ளது எனும் வேதனையில் அவர் துடித்தார்.

ஒரு நாள் வெளியில் இருந்து புத்தகம் வாசிக்கும் போது ஓர் ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. அப்போது தான் அவ ரைக் கண்டார் வாத்தியார். 'ஓ மணி மொழி டீச்சர் நீங்களும் இங்கே தானா?' 'ஆமாம் சேர்! நான் இங்க வந்து ரெண்டு வருஷமா குது. என்ன செய்ய நாம இன்னும் கொஞ் சக் காலம் வாழப் போறோம். சந்தோசமா இருந்திட்டுப் போவமே! நீங்க எப்ப இங்க வந்தீங்க சேர்?' என்று விசா ரித்தார்.

சங்கர் வாத்தியாரும் மணி மொழி டீச் சரும் ஒரே பாடசாலையில் பணி புரிந்த வர்கள். தலைமையாசிரியரான சங்கர் வாத்தியார் மேல் மரியாதை வைத் திருந்தார் மணி மொழி டீச்சர். அதனாலே, அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர் வுடன் அங்கு பழகத் தொடங்கினர். பரஸ் பரம் உதவிகள் செய்து கொண்டனர். மெல்ல மெல்ல வாத்தியார் கவலையை மறக்கத் தொடங்கினார்.

மணிமொழி இங்க வாங்களேன்! கொஞ்சம் நீங்க வெச்சிருக்கிற புத்தகத் தைக் கொஞ்சம் தாங்களேன்! பாத்திட்டுத் தாறன்' என்றார் சங்கர் வாத்தியார். 'சரி சேர்' என்ற வாறு புத்தகத்தை நீட்டினார் மணிமொழி டீச்சர்.

இவ்வாறு காலங்கள் உருண் டோடின.
தகப்பனை இந்தக் 'கலைவாணி' காப்ப கத்தில் சேர்த்து விட்டுச் சென்றபின் இங்கு அப்பாவுக்குப் பரிச்சயமான மணி மொழி டீச்சரும் இருப்பதை அறிந்து கண்ணனும் ஆனந்தம் அடைந்தான். சங்கரும் மணி மொழியும் ஒரே பள்ளியிலே பணி புரிந்து பழகியவர்கள் என்பது கண்ணனுக்கு ஆத்ம திருப்தி அளித்தது.

மணிமொழி ஆசிரியர் காப்பகம் வந்த பின்னர் மனமகிழ்வுக்கான சில செயற் பாடுகளை அங்கு ஒழுங்கு செய்தி ருந்தார். சங்கர் வாத்தியாரும் மணிமொழி டீச்சரும் தங்களது ஓய்வூதியப் பணத்தில் பரிசுப் பொருட்களை வாங்கினர். ஒவ்வொரு மாதமும் இச்செயல் இடம் பெறுவது வழக்க மாகும்.

அங்கே, ஒவ்வொருவரும் தங் கள் இயலு மைக்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகள் செய்து மகி ழ்வது, ஒருவரை ஒருவர் பாராட்டுவது, போட்டிகள் இடம் பெறுவது எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறும்.

இந்த நிகழ்வுகள் மாதம் ஒருமுறை இடம் பெறுவது வழமையாக இருந்தது. இங்கு தாலாட்டுப் பாடல், சினிமாப் பாடல், கவி பாடுதல், தேவாரம் பாடுதல் கீறிட்ட இடம் நிரப்புதல், குறி பார்த்து எறிதல் போன்ற பல நிகழ்ச்சிகள் கோலாகலமாக இடம் பெறும். பங்குபற்றிய அனைவரை யும் பாராட்டிப் பரிசில்கள் வழங்கப் படும்.

அன்றைய போட்டியில் மணி மொழி டீச்சரும் சங்கர் வாத்தியாரும் இடைவெளி நிரப்பும் போட்டியிலும் பங்கு பற்றினர். இருவரும் அருகில் அமர்ந்து கொண்டு எழுதினர்.

இறுதியில் இருவரும் சிறப்புப் பரிசு களை அள்ளிக் கொண்டனர். அளவில்லா ஆனந்தம் கொண்டனர். கவலைகள் மற ந்து வாழப்பழகினர். நிகழ்ச்சி முடிந்ததும், அடுத்த நிகழ்ச்சிக்கு ஆயத்தம் செய்ய எண் ணினர். இனிமையுடன் வாழப் பழகினர். இப்போதெல்லாம் அவர்களுக்கு நேரம் போவதே தெரிவதில்லை.

# பெண்ணாய் நான்

மூச்சுக்களை வெப்பமேற்றி
நீறுபூத்த தணலாய்
தணியும் நெருப்புச் சுரங்கமாய்
பெண்

சுகங்களை மறந்து
சோகங்களை சுமந்து
சுற்றத்தின் வேலியாய்
சுழலும் சுமை தாங்கியாய்
பெண்

கனவுகளைக் கலைத்து
கற்பனை வாழ்வான
கலியாண சந்தையில்
விலையாகும் விற்பனைச் சரக்காய்
பெண்

கல்யாண வாழ்க்கையிலே
கறுப்புச் சந்தையில் விலைபோகும்
ஆண்களை வாங்கிடும் நுகர்பவளாய்
பெண்

விலைப் பொருளிற்கு
வாழ்க்கைப் பட்டதால்
விலங்கிடப்படாத சிறை
வாழ்க்கைக் கைதியாய்
பெண்

தாலிக்குத் தன்னையே
தாரை வார்த்துத் தரையில்
தத்தளிக்கும் தாரமாகி
தரை தேடும் ஓடமாய்
பெண்

மௌனத்தில் தலைகுனிந்ததால்
வார்த்தைகளைத் தொலைத்து
உணர்வுக்குள்ளே உறைந்து
உணர்வற்ற ஊமையாய்
பெண்

காணும் கனவுகளே
கனவாகிப் போனதால்
கண்களிற்கும் கற்பனைகளிற்கும்
கடிவாளமிடும் கற்பனைக் குதிரையாய்
பெண்

ஆண் வர்க்கத்தின் ஆக்கிரமிப்பில்
அன்பைப் பறிகொடுத்து
பரிதவிக்கும் பாசப் பத்தினியாய்
பெண்

மண்ணில் மானிடம்
மலர்ந்து தளிர்க்க
ஓடாய் உழைக்கும்
உயர் தொழிசாலையாய்
பெண்

செல்விக்கு விடையளித்து
திருமதி பட்டம் வாங்கி
கலியாணக் கைதியாய் செல்லும்
மாண்புமிகு மனைவியாய்
பெண்

வரதட்சணை கொடுக்க
வலுவிழந்து போனதால்
வாழ்க்கையை முடிக்கத்
துடிக்கும் களைகொல்லியாய்
பெண்

றஹீமா இன்ஷார்
மீராவோடை



# தாய்மை

## ராம்க்ருஷ்



அம்மா, இன்னைக்கு என்னம்மா சாப்பாடு வச்சிருக்கீங்க?' என்று கேட்டாள் இனியா

'ரசம் சாதமும் உருளைக்கிழங்கு வறுவலும் வைத்திருக்கிறேன்மா'

'எங்களுக்கு இவ்வளவு சிம்பிளாகவா வைப்பீங்க.'

'ஆமாம்மா இனியா கேட்பது தான் என் கேள்வியும்'என்றான் இனியாவின் அண்ணன் விந்தன்.

'எனக்கு வேலைக்குப் போகணுமே, உங்களுக்குத் தெரியாதா என்ன?'

'ஆமாம், அங்க மட்டும் போய் விதவிதமா சமைச்சுக்குடு'என்று மூக்கை சிந்தினாள் இனியா.

'உங்கள் அப்பா இருந்திருந்தால் நான் ஏன் வேலைக்குப் போகிறேன்? அவர் திடீரென்று ஒரு விபத்தில் என்னை விட்டுப் போன பின்னர் தான் நமக்கு இந்த நிலை. அவருடைய இழப்பு என்னை எவ்வளவு வருத்தியது..' என்றவளின் கண்களில் கண்ணீர் திரையிட்டது

'அம்மா உன்னை அழ வைப்பதற்காக நாங்கள் கேட்கவில்லை. நீ செல்லும் அந்த இரண்டு வீடுகளிலும் விதவிதமா சமைக்கிறியே, எங்களுக்கு அப்படி கிடைக்கவில்லை என்றாலும் எப்பவாவது கிடைக்காதா என்ற ஏக்கம் தான்.'

'இரண்டு வீட்டார்களும் வசதியானவர்கள். அவர்கள் சாப்பிடுவது ரிச்சாக இருக்க நான் நல்லபடியாக சமைக்க வேண்டியிருக்கிறது. எனக்குக் கிடைக்கும் 20000 ரூபாயில் தான் நம் குடும்பச் செலவுகளும் உங்கள் படிப்புச் செலவுகளும் நடக்க வேண்டும். உங்களுக்கு ருசியாக சாப்பாடு தரவில்லையே என்று எனக்கும் வருத்தமிருக்கிறது. அதற்கு காசும் பத்தாது. எனக்கு நேரமுமில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? கொஞ்சம் பொறுங்கள்இன்னொரு வீட்டிலும் சமைக்கக் கேட்டிருக்கிறார்கள். அதை ஒப்புக் கொள்ளலாமா என்ற தயக்கமிருந்தது. இனி அதற்கு ஒப்புக் கொண்ட பிறகு உங்களுக்கும் நல்லபடியாக சமைத்துத் தருகிறேன்.'

இதைக் கேட்ட இனியாவும், விந்தனும் மிகவும் கவலையுடன், 'வேண்டாமம்மா, நீங்கள் பாவம். நாங்கள் ஏதோ அறிவில்லாமல் கேட்டு விட்டோம். நீங்கள் அந்த இன்னொரு வீட்டாரிடம் என்னால் இயலாது என்று சொல்லிவிடுங்கள். அம்மா நீங்கள் தான் வேண்டும். நீங்கள் என்ன சாப்பாடு தந்தாலும் இனி நாங்கள் குறை ஏதும் சொல்லமாட்டோம்' என

அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

மங்களத்தின் கண்களிலும் கண்ணீர் அணை கட்டியது.அங்கே ஒரு பாச மேடை அன்பு வெளிச்சத்தில் குளித்தது.

இரண்டு வீட்டிலும் நல்ல சமையல் ருசியுடன் இருந்ததால் மங்களத்தை அவர்கள் மிக மரியாதையுடன் தான் நடத்தினர்.

'மங்களம் இன்று நீங்கள் வைத்த பாயசம் ரொம்ப ஜோர். நாங்கள் சாப்பிட்டுவிட்டோம். மீதமிருக்கும் பாயசத்தை நீங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் சரியா?'

'வேண்டாமம்மா'

'ஏன்ம்மா, நாங்கள் மனமுவந்து தானே தருகிறோம். உங்கள் குழந்தைகளுக்குக் கொடுங்கள். தட்டாமல் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று வற்புறுத்தவே அதை மங்களம் வாங்கிக் கொண்டாள்.

இரண்டு வீட்டுப் பணிகளையும் முடித்து தன் வீடு வந்த மங்களம் தன் பிள்ளைகள் காலையில் மீதமிருந்த ரசம் சாதத்தை வெறுமனே சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

இன்று இரண்டாவது வீட்டில் அவர்களுக்கு வேண்டாமென்று ஒதுக்கிய ஊறுகாய் பாட்டில் புதிதை வாங்கி வந்திருந்தாள். அதை எடுத்து அதிலிருந்து ஊறுகாய்களை இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுத்தாள். இருவரும் அவளை ஏறிட்டுப் பார்த்தனர். புதிய ஊறுகாய் பாட்டிலையும் பார்த்தனர்.

'ஏன் அப்படி பார்க்கிறீர்கள். இது ஒரு வீட்டில் இந்த ஊறுகாய் அவர்களுக்குப் பிடிக்காது என்று என்னை கொண்டு போகச் சொன்னார்கள் அதுதான்'

இனியாவும் விந்தனும் ஊறுகாய் தொட்டு சாப்பிடுவதை அமைதியாய்ப் பார்த்தாள் மங்களம். அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் மெதுவாக கொண்டு வந்திருந்த பாயசத்தை அவர்கள் இருவருக்கும் இரண்டு டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தாள்.

இருவரும் மீண்டும் அவளை ஏறிட்டனர். 'ஏன்ம்மா நாங்கள் காலையில் தெரியாமல் கேட்ட தவறுக்காக நீங்கள் அந்த வீட்டார்களிடம் கேட்டு வாங்கி வந்தீர்களா இதையெல்லாம்'

'இல்லை செல்லங்களா, இரண்டுமே அவர்களாகக் கொடுத்தது தான். மற்ற நாட்களில் நான் மறுத்து விடுவேன். இன்று அவர்கள் என்னை மிகவும் வற்புறுத்தினார்கள்.'

அடுத்த நாள் காலையில் அம்மா பணிக்குப் போனதும் பள்ளிக்கும் கல்லூரிக்கும் போகுமுன் இனியாவும் விந்தனும் பேசிக் கொண்டிருந்தனர்.

'அண்ணா, நம் அம்மா கஷ்டப்பட்டு நம்மை வளர்க்கிறார்கள் நான் நேற்று அப்படிக் கேட்டது தப்புதானண்ணா'

'நீ கேட்டது தப்புதானென்றாலும் நமக்கும் ஆதங்கம் இருக்கிறது என்பது உண்மை தான். கவலைப் படாதே! இன்னும் இரண்டு வருடங்கள் தான். நான் பி.ஈ. முடித்து விடுவேன். காம்பஸ் இண்டர்வ்யூவில் செலக்ட் ஆகிடுவேன். அதற்குப் பிறகு அம்மாவை நன்றாக வைத்துக் கொள்ளலாம். உனக்கும் நீ விரும்பியது எல்லாம் கிடைக்கச் செய்வேன். சரிதானா?

‘சரி அண்ணா வீட்டுக்கு வந்ததும் நானும் அம்மாவிற்கு சமையலில் என்னால் முடிந்த உதவிகள் செய்கிறேன். அப்படியே சமையலையும் கற்றுக் கொள்கிறேன்.’

‘சரி வா போகலாம்’என விந்தன் சொல்ல இருவரும் தங்கள் தங்கள் கல்விக் கூடங்களுக்குச் சென்றனர்.

ஒரு வீட்டில் இன்று மசால் தோசை சுட்ட போது மங்களத்திற்கு தன் குழந்தைகளின் ஆசை மனதில் அலை அடித்தது. இதை நாம் வீட்டிலும் செய்து கொடுக்கலாமே என மனம் நினைத்தது.

எதற்கோ மங்களத்தைக் கூப்பிட்ட அந்த வீட்டம்மாள் மங்களம் திரும்பாததைப் பார்த்து அவள் தோளைத் தொட்டுக் கூப்பிட்டாள். திடுக்கிட்டுத் திரும்பிய மங்களம், ‘என்னம்மா’ எனப் பதறினாள் ‘நீ ஏதோ நினைவில் இருக்கிறாய் போலும். ஏதாவது உதவி வேண்டுமா’எனக் கேட்டாள்

‘இல்லை இல்லை, சட்டென்று ஒரு நினைவு. நான் இப்படி நினைப்பதில்லை. வீட்டுக்கு வெளியே வந்ததுமே என் நினைவுகளைக் கழட்டி வைத்து விடுவேன். இன்று சற்று தடுமாறி விட்டது. கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா’என்றாள்

‘ஐயோ, நான் கோபம் கொள்ளவில்லை. உங்கள் கஷ்டம் தெரிந்தால் உதவலாமே என்று தான் கேட்டேன்’

‘இப்போதைக்கு ஒன்றும் கஷ்டம் இல்லையம்மா.’

‘சரி. ஏதாவது வேண்டுமென்றால் தயங்காமல் என்னிடம் கேளுங்கள். முடிந்த உதவி உங்களுக்கு செய்ய காத்திருக்கிறேன் என்றாள் வீட்டம்மா.

‘உங்கள் நல்ல மனதுக்கு நன்றியம்மா’ என்று சொன்ன மங்களம் தன் பணியில் மீண்டும் ஈடுபடத் தொடங்கினாள்.

அன்று இரவு 8 மணிக்கு வீடு திரும்பிய மங்களம் வேகவேகமாக உருளைக்கிழங்கு மசால் செய்து ஏற்கனவே இருந்த மாவில் தோசை ஊற்றி அதில் மசால் சேர்த்து ஆறு தோசைகள் போல் சுட்டு எடுத்தாள். 8.45க்கு இனியாவையும் விந்தனையும் சாப்பிடக் கூப்பிட்டாள்.

அவர்கள் படித்துக் கொண்டிருந்தவர்கள் அம்மா சாப்பிடக் கூப்பிட்டவுடன் விரைந்து வந்தனர். தட்டில் மசால் தோசைகளை வைத்து அவர்களுக்குக் கொடுத்தாள்.

தோசைகளைப் பார்த்தவுடன் இருவரும் தட்டை மகிழ்வாக அருகில் வைத்து உண்ணத் தொடங்கினர்.

‘அம்மா எனக்கு இரண்டு போதும்மா’ ’என்றாள் இனியா. ரொம்ப வயிறு நிரம்பி விட்டது‘

‘எனக்கும் 3 போதுமம்மா’ என்றான் விந்தன்.
‘ரொம்ப நன்றாக இருக்கிறதம்மா’ என்றனர் இருவரும் முகத்தில் மகிழ்ச்சியுடன்.
‘அம்மா நீங்கள் சாப்பிடவில்லையா‘ என்றான் விந்தன்

‘நான் அங்கே ஒரு வீட்டில் சாப்பிட்டு விட்டேன். வேணுமானால் இனியா வைத்த ஒன்றை சாப்பிடுகிறேன். சரியா?’

அவரவர் தங்கள் இடத்திற்குச் சென்றனர். வீடு சிறிதாயிருந்தாலும் ஓரளவு வசதியுடன் இருந்தது.

மங்களத்தின் கணவர் தன் சம்பளத்தில் பிடித்தம் பிடித்து கட்டிய வீடு. நல்ல வேளையாய் அவர் இறப்பதற்கு முன்பே அதன் பிடித்தம் முடிந்து விட்டிருந்தது. அவர் இன்சூரன்ஸ் தொகையிலிருந்து சில சிறு கடன்களையும் அடைத்து விட்டிருந்தாள்.

அவளுக்கு தனக்கு அடுத்த வீட்டிலிருந்த தன்னையொத்த ஒரு பெண்மணி மட்டுமே பேசுவதற்கும் பழகுவதற்கும் என இருந்தாள். அவளும் நல்லவள் தான்.

ஒரு தோசையை சாப்பிட்டு விட்டு மெல்ல வீட்டிற்கு வெளியில் வந்தவள் பக்கத்து வீட்டுத் திண்ணையில் அடுத்த வீட்டுப் பெண்மணி சுந்தரி உட்கார்ந்திருந்தவள் தன்னை அழைப்பதைப் பார்த்து அவளருகில் சென்றமர்ந்தாள்.

'மங்களம், இன்று நாள் எப்படி ஓடிற்று உனக்கு?'

'என்ன எப்போதும் போலத்தான். ஒரேயொரு விசேஷம் தான் . இன்று என் குழந்தைகளுக்கு மசால் தோசை செய்து கொடுத்தேன்'

'ஆமாம். தினமும் காலையில் 7 மணிக்குச் சென்று நின்றபடியே இரண்டு வீட்டிலும் சமையல் பணி முடித்து இரவு 8 மணிக்கு வருகிறாயே, அலுப்பாக இல்லையா உனக்கு'

'என் குழந்தைகளுக்கான என் வாழ்வில் அலுப்பு ஏற்படாது சுந்தரி! எனக்கு விதித்தது இது என்றான பின் நான் இதைப் பற்றியெல்லாம் நினைப்பதேயில்லை.'

'ஆமாம். காலையில் புறப்படும் முன் ஏதோ சாப்பிடுகிறேன் என்றாய் மதியமும் இரவும் எப்படி?'

'நான் யார் வீட்டிலும் சாப்பிடமாட்டேன். காலையில் பிள்ளைகளுக்குச் செய்யும் சொற்ப உணவில் எனக்கும் சிறிது எடுத்துப் போவேன்.'

'இரவு வந்ததும் அப்படியே. இன்று எத்தனை தோசை சாப்பிட்டாய். பொய்யில்லாமல் சொல்!'

'ஒன்று தான். எனக்கு அதுவே போதும்.'

'மங்களம் நீ உன் உடலையும் பார்த்துக் கொண்டால் தான் உன் பிள்ளைகளை நன்கு கரையேற்ற முடியும். அதையும் யோசி நீ.'

'சரி. நீ சொல்கிறாய், நான் பார்த்துக் கொள்கிறேன். நான் படுக்கப் போகவா?'

'போ. போய் படு. காலையில் 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும்.மாடு மாதிரி உழைக்கிறாய். அந்தக் கடவுள் தான் உன் நல்வாழ்வுக்குக் கண் திறக்க வேண்டும்.'
இருவரும் தங்கள் தங்கள் வீட்டிற்குள் சென்றனர்

ஒன்றரை வருடங்கள் இப்படியே கழிந்தன. ஒரு நாள் இரவு வரும்போதே மங்களம் தள்ளாடி நடந்தாள்.
வாசலில் நின்றிருந்த சுந்தரி இவளைப் பார்த்ததும் ஓடி வந்து இவளை ஆதரவாய்ப் பிடித்தவர். அவள் உடம்பு தணலாகக் கொதிப்பதைப் பார்த்து இனியாவையும் விந்தனையும் கூப்பிட்டு 'அம்மாவுக்கு காய்ச்சல். நீங்கள் வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் அம்மாவை டாக்டரிடத்தில் காட்டி மருந்து வாங்கி வருகிறேன்' என்றவள் விடுவிடென எதிரே வந்த ஆட்டோவை நிறுத்தி அதில் மங்களத்தை இருத்தி அவளும் கூடச்

சென்றாள்.

இனியாவும் விந்தனும் திகைத்து நின்றனர். அவர்கள் முகங்களில் துன்பத்தின் நிழல் தாண்டவமாடியது.மணி 9.30 ஆகும் போதுதான் இருவரும் ஆட்டோவில் திரும்பி வந்தனர்.வாசலிலேயே நின்றிருந்த இனியாவும் விந்தனும் அம்மாவைக் கண்டவுடன் ஓடி வந்து அம்மாவைக் கட்டிப் பிடித்தனர்.

' 'டாக்டரைப் பார்த்தோம். அவர் இரண்டு டெஸ்ட் எடுக்கச் சொன்னார். எடுத்துப் பார்த்ததில் நல்ல வேளையாய் வேறு எந்தக் காய்ச்சலும் இல்லை. இது களைப்பின் மிகுதியால் வரும் காய்ச்சல். மூன்று நாட்கள் மருந்து சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்தால் சரியாகும். என்று டாக்டர் சொன்னார். நான் எங்கள் வீட்டிலிருந்து டிபன் செய்து எடுத்து வருகிறேன். மூன்று பேருக்கும் தருகிறேன்' என விடுவிடென் தன் வீட்டிற்குள் சென்றாள் சுந்தரி.

மூவருக்கும் டிபன் கொடுத்து., 'அம்மாவைப் பார்த்துக் கொள்ளுங்கள் விந்தன், நாளைக்கு நீ சென்று அந்த இரு வீட்டாரிடமும் அம்மாவுக்கு சாதாரண காய்ச்சல் தான். டாக்டர் மூன்று நாட்களுக்கு ரெஸ்ட் எடுக்கச் சொன்னாராம். தயவுசெய்து பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்துவிடு!
அவர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்' என்றாள்..

'இனியா, விந்தன் உங்கள் அம்மா மாதிரி தியாகிகளைப் பார்க்க முடியாதப்பா. அவள் இரவு நிறைய நாட்கள் சாப்பிடுவதேயில்லை. வேலை செய்யும் வீடுகளிலும் உண்பதில்லை. எல்லாம் உங்கள் நன்மைக்காகத் தான்' என்று சொல்லிச் சென்றாள்.

'அம்மா, அம்மா' என்று இருவரும் மங்களம் அருகில் சென்று அழுதனர்.
'ஒன்றுமில்லை செல்லங்களா, அந்தப் பையிலிருந்து மாத்திரைகள் எடுத்துக் கொடுங்கள். நான் சாப்பிடுகிறேன். இரண்டே நாளில் குணமடைவேன். கவலை வேண்டாம்.'

'நான் ஏதாவது வேலைக்குப் போகவா'என்றான் விந்தன்.

'வேண்டாமப்பா, இன்னும் 6 மாதங்களில் நீ படிப்பு முடித்து விடுவாய். அதற்குப் பிறகு உனக்கு வேலை கிடைத்து விடும். அதனால் நீ கவலை கொள்ளாதே' என்றவள் 'சரி நான் படுத்துக் கொள்கிறேன்'என்று படுக்கையில் சாய்ந்தாள்.

'அண்ணா, அம்மா பாவம். எவ்வளவு உழைக்கிறார்கள். எல்லாம் நமக்காகத்தான். அதனால் நீ நன்றாகப் படித்து வேலைக்குப் போய் அம்மாவைப் பார்த்துக் கொள்ளலாம். கவலைப் படாதே' என்றவள் அவளும் அழுதாள்.

'இனியா, அம்மா இரவு சாப்பிடுவதே இல்லையாம். அவர்கள் வீட்டிலும் சாப்பிடுவதில்லையாம். மிகக் குறைவாகத்தான் உணவு உண்கிறாள். எனவே இனி நாம் அம்மாவுடன் சேர்ந்து தான் சாப்பிட வேண்டும். உள்ளதைப் பகிர்ந்து சாப்பிடுவோமே! சரியா?' என்று கேட்க,'சரி அண்ணா' என்று தலையாட்டினாள்.

இனியா மற்றும் விந்தனின் மனங்களில் தாய்மை நிறைந்த அந்த அம்மா மிக உயர்ந்த இடத்தில் வீற்றிருக்கிறாள் என்பது உறுதி.

# பெண்ணியம் போற்றுவோம்



மாதவம் செய்து மாதராய் பிறந்து
பெண்ணினம் உயர்ந்து
மேதினியில் சிறந்திட்டோம்

அடிமையும் ஆண்மையும்
பொறுமையும் சிறுமையும்
போரிட்டு திகழ்ந்திட
போர்த்திட்ட மகளிர் நாம்

தியாகங்கள் பல புரிந்து தன் பசி மறந்து
அனுதினம் காப்பாள் அம்மாவாய்
விழ்ந்து நீ ஒடிந்தாலும் பூக்கும்
அன்பால் மீட்பாள் தங்கையாய்

சூரியனாய் சுட்டெரித்தாலும்
கண்மணியாய் காதல் செய்வாள்
மனைவியாய் பேசுவதோ
காண்பதோ ஒரு நொடி என்றாலும்
பாசமழையால் நனைப்பாள் பாட்டியாய்

அலுப்பிலும் தோல்வியிலும் தட்டிக் கொடுத்து
உச்சங்கள் பல காட்டிடுவாள்
விருப்பிலும் வெறுப்பிலும் சலிக்காமல் நின்று
சாதனைகள் பல படைத்திடுவாள்

அவள் மாதவிலக்குகளிலும் அலுக்காமல்
விளக்காய் எரிந்து கொண்டே இருப்பாள்
மென்மையும் மேன்மையும்
கண்ணீரால் காத்திடுவாள்

ஆணிற்கு வீரம் பொதுப்பண்பு
ஆனால் பெண்ணிற்கு
வலிமைதான் தாய்க்குலப்பண்பு
அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்குஎனச்சொல்லி
சுதந்திர சிறகை சுருட்டி எறியாதீர்கள்

பதுமை என வாழ்ந்து பதுங்காது
புதுமையென பெண்ணையும்
ஆணுக்கு சமமாய்ப் போற்றிடுவோம்
நெஞ்சுரம் காத்திடுவோம்

**ரீனத் றாசிக்.**
**நிந்தவூர்.**
**இலங்கை,**

# பெண் எனும் பேராற்றல்



உரத்த தொனியில் பேசாள்
உள்ளமைதி கொள்வாள்
பொறுத்த பூமாதேவி ஒக்கும்
திறத்தை உடைத்த பூவாள்

மறைத்த தீவிர மனதாள்
மௌன முகவரி தருவாள்
மிகைத்து எழுந்திடும் தீயாய்
மண்ணில் வெற்றி பெறுவாள்

மணக்கும் பூமொழி உடையாள்
கணக்கில் தியாகத் தருவாள்
இனிக்கும் இல்லறம் புரிவாள்
தனக்கென வாழாத் தகையாள்

காற்றை ஒத்த காரிகை
வெற்றிடம் நிரப்பும் வித்தகி
சுழலும் புயலாய் உயர்ந்து
சரிதம் படைக்கும் வல்லாள்

உடைக்கும் உளியாய் செயலி
தடைக்கல் அகற்றும் விறலி
விடைக்கும் துடிப்பின் பிறவி
சுடர்விழி எரிக்கும் கனலி

பாரதியின் பிரியப் பெண்ணவள்
பகுத்தறிவின் அழகுக் கண்ணவள்

பொங்கும் கடலலை போன்றவள்
கங்குலில் அவிழும் நிலவவள்

வீரத்தில் முளைத்த வனிதை
விடியலின் கதிராகும் புனிதை
விழிகளால் அகிலம் உய்ப்பவள்
கலியெலாம் போக்கிட விளைந்தவள்

பேரூற்றாய்க் கிளம்பி வந்தவள்
பெருவெற்றி சமைத்திடத்
துணிந்தவள்
பேரானந்தம் தந்திடும் நல்லவள்
பிறர்நலனுக்காய் வாழப் பிறந்தனள்

அடங்காத ஆக்ரோஷம் அவளே
அடங்கிடும் அகிம்சையும் அவளே
இலட்சியம் வெல்லும் மாயவள்
அலட்சியம் காணாத் தூயவள்

பேராற்றல் கொண்ட பெண்ணவள்
பேடிமைத்தனம் களையும் தாயவள்
எல்லையில்லாக் கனவின்
தோணியாள்
ஏற்றமிகு புகழின் ஏணியாள்

சிரிக்கும் எழிலின் சோதி
சீதள நெஞ்சத்தின் பரிதி
மகா ஞானத்தின் நிகரி
மகத்தான மாற்றத்தின் அதிதி



**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# பெண்ணே நீ கலங்காதே! உன் வாழ்க்கை உனது கையில்!

மலருக்கு மலர் தாவி தேன் குடிக்கும் வண்டுகள் போலவே சில மனிதர்களும் இருப்பார்கள். அவர்களுக்குத் தேவையான மகிழ்ச்சியை நீ கொடுக்கும் வரை தான் அவர்கள் உன்னோடு பழகுவார்கள். அவர்களுக்குத் தேவையான ஆலோசனையை நீ வழங்கும்வரை தான் அவர்கள் உன் வார்த்தைகளுக்கு செவிமடுப்பார்கள்.

அவர்களுக்குத் தேவையான உதவிகளை நீ புரியும்வரை தான் அவர்கள் உன்னோடு இருப்பார்கள். அவர்களுக்குத் தேவையான ஆறுதலை நீ கொடுக்கும் வரை தான் அவர்கள் உனக்காகக் காத்திருப்பார்கள். எப்போது நீ மனமுடைந்து போகிறாயோ; எப்போது நீ உடல்நலம் குன்றி அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் போகிறாயோ அக்கணத்திலிருந்தே அவர்கள் உன்னை விட்டு விலகிவிடுவார்கள்.

நீ வழங்கிய அன்பையும் மகிழ்ச்சியையும் நேரத்தையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேறொருவரைத் தேடிச் சென்று விடுவார்கள். இவையெல்லாம் உண்மையென்பதை வாழ்க்கையின் ஏதோ ஒரு காலகட்டம் உனக்குப் புரிய வைக்கும். துக்கம் தொண்டையை அடைக்க கண்ணீர் பெருக்கெடுக்க மனம் பாரமாக இதயம் துடிக்கவே மறுக்க நீ ஒரு மூலையில் அமர்ந்து கடந்தகாலத்தை மீட்டிக் கொள்வாய்.

நீ இதுவரை அள்ளி வழங்கிய உண்மையான அன்பும் விசுவாசமும் உன்னைப்போலவே அநாதையாகும். நீ உனது நேரத்தை அவர்களுக்காக ஒதுக்கி, பார்த்துப் பார்த்துப் புரிந்த உதவிகளுக்கும் செய்த பணிவிடைகளுக்கும் எந்தவித அங்கீகாரமும் கிடைக்காமல் போனதை உணர்வாய்.

இப்படிப்பட்டவர்களுக்காகத் தான் எனது அன்பை, நேரத்தை,சக்தியையெல்லாம் கொட்டிக் கொடுத்தேனா? என சிந்திக்கையில் வார்த்தைகள் தொண்டைக்குழியினுள் சிக்கிக்கொள்ளும். கண்ணீர் மட்டும் தாரை தாரையாக வழிந்தோடும்.


பரவாயில்லை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அழுது கொள்.

இது உன் ஆற்றாமையை வெளிப்படுத்தும் நேரம் மட்டுமல்ல. உன் சுற்றத்தையும் வாழ்வியலின் யதார்த்தத்தையும் உனக்குள்ளிருக்கும் ஆற்றலையும் சக்தியையும் நீ உணரும் நேரம். ஆதலால் நீ அழலாம். அழுது முடித்த அந்த நொடியிலிருந்தே உன்னை நீ நேசிக்கத்தொடங்கு.

உன் மகிழ்ச்சிக்காக, உன்னைப் பலப்படுத்துவதற்காக உன்னை விருத்தி செய்வதற்காக நேரத்தை ஒதுக்கப் பழகு.

உனக்கான ஆறுதலை நீயே கொடுக்கப் பழகு. உனது உற்ற உறவு ஆற்றாமையால் துவளும்போது அந்த உறவோடு எவ்வளவு இரக்கமாகவும் அன்பாகவும் அணுகி ஆறுதல் கூறுவாயோ, அதே போல உனது மனம் புண்படும்போதெல்லாம் அதை அன்பாக அணுகி ஆறுதல் கூறு. உனது மனதோடு நீ உறவாடு. உன் கண்ணீரை உனது கைவிரல்களால் நீயே துடைத்து விடு. உனது தோள்களை நீயே தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி விடு. உன்னை நீயே சமாதானப்படுத்து. உனக்கு நீயே நட்பாகு. உன்னோடு நீயே சமரசமாகு. உனக்கான அமைதியை உன்னுள்ளே தேடு. உனக்கான மகிழ்ச்சி உன்னுள்ளே தான் இருக்கிறது. ஆகவே அதை உன்னுள்ளே தேடு. எந்தச்சூழ்நிலை வந்தாலும் உனக்காக நீ இருக்கிறாய் என்ற துணிவோடிரு. எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும் சக்தி உன்னுள்ளே இருப்பதை முழுமையாக நம்பு! உனக்குப் பிடித்ததை எல்லாம் செய்யத் தொடங்கு.

இவற்றையெல்லாம் நீ செய்யத்தொடங்குகையில் உனக்கு உன்னை மிகவும் பிடிக்கும். உன்மனம் மகிழ்ச்சியால் நிரம்பி வழியும். உன் மனதிலும் உடம்பிலும் பிரகாசமான ஒளி வீசுவதை நீ உணரத் தொடங்குவாய். ஆம். இது உன் வாழ்க்கை. அதை நீ மகிழ்ச்சியாக வாழ்ந்துவிடு.



ஆம். உன் வாழ்க்கை உனது கரங்களிலே தானுள்ளது.வாழ்க்கை வாழ்வதற்கே!

**சுபாஜினி மனோகரன் (வன்னியூராள்)**
**சூரிச் – சுவிஸ்**

# மகளிர் தின மகுடங்கள்



*ஆண்டுக் கொரு முறை*
*ஆர்த்தெழுந்து உன்னை*
*ஆராதிக்கிறார்கள்*

*விழாக்கள் தோறும்*
*வாழ்த்துக்கள் கூறி*
*கொண்டாட்டம் நடத்துகின்றார்கள்*

*பூமாலை சூட்டி*
*பொன்னாடை போர்த்தி*
*பெருமைப் படுத்துகிறார்கள்*

*பட்டாடை தந்து*
*பாமாலை கோர்த்து*
*கௌரவம் தருகிறார்கள்*

*ஒருநாளைத் திருநாளாக்கி*
*பெருநாளாய் எண்ணி உனக்கு*
*பெருமிதம் சேர்க்கிறார்கள்*

*பெண்மை வாழ்க வென்றும்*
*பெண்மை வெல்க வென்றும்*
*பெருங் கூத்திடுகிறார்கள்*

*அவர்களெல்லாம் நீ*
*நாளெல்லாம் மாடாயுழைத்து*
*ஓடாய்த் தேய்ந்து*
*அடுக்களையில் கிடந்துழலும் போது*
*அண்ணாந்தும் பார்த்ததில்லை*

*சக்கரம் பூட்டிய இயந்திரமாய்*
*சுற்றிச் சுழன்று*
*சேவைகள் செய்கையில்*
*சற்றும் உன்னை*
*சட்டை செய்யவில்லை*

*பணியிடத்தில் பலியானாய்*
*நரிகளிடம் நசுங்கிப் போனாய்*
*அஞ்சியஞ்சி ஆயுளைக் கழித்தாய்*
*கண்ணியம் காத்தவர்களும்*
*கண்களால் காங்தெடுத்தபோது*
*குறுகிப்போனாய்*

*உயர்வாய் மதித்தவரும்*
*உரசிப்பார்க்க நினைத்த போது*
*உள்ளழிந்து தவித்தாய்*

*உன் உடலை யளந்து பார்த்து*
*உள்ளம் மகிழ்ந்து போனவர்ளைப்*
*பார்த்து உருகிப்போனாய்*

*நீ உள்ளங்களுடன்*
*உரையாடிய போதும்*
*உறவாடிய போதும்*
*ஊனக் கண்கள் உன்னை*
*ஊடுருவக் காண்கையில்*
*புழுவாய் நெளிந்தாய்*

*வன்மமும் வன்முறையும்*
*வக்கிரமும் கட்டவிழ்ந்த போதெல்லாம்*
*கண்களை சேலைத் தலைப்பால்*
*துடைத்தபடி பொறுமை காத்தாய்*

*ஊமையாய் செவிடாய்க் குருடாய் மாறி*
*ரணங்கள் மறைக்க*
*புன்னகைப் பூப் பூத்தாய்*

*ஒரு நாளில் உனக்கு மகுடம் சூட்டி*
*மகாராணி யாக்குகிறார்கள்*
*மகிழ்ச்சியால் மயங்கிப் போகாதே!*

*மறந்து விடாதே; மீண்டும் ஒரு*
*மாலைக் கருக்கலில்*
*இருட்போர்வை போர்த்த*
*முட்கிரீடம் சூட்ட அவர்களெல்லாம்*
*காத்துக் கிடப்பார்கள்.*

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
**காத்தான்குடி**

### பிபிசியின் நூறு உலக சாதனை மகளிர் பட்டியலில் இடம்பிடித்த

# மூன்று இந்திய சாதனைப் பெண்கள்



**கா.ந.கல்யாணசுந்தரம்**

மார்ச் 8, 1857 அன்று முதல் உலகமெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக மகளிர் தினம் மார்ச் மாதம் 8 ம் தேதி கொண்டாடப்படுகிறது. 1789ம் ஆண்டு ஜூன் 14ம் தேதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன் வைத்து, பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்த சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கு ஏற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்ற கிளர்ச்சியும் நடைபெற்றது. 2014ல் 100க்கு மேற்பட்ட நாடுகளில் தேசிய மகளிர் தினம் கொண்டாடப்பட்டது நாமெல்லாம் அறிந்தது.

உலக மகளிர் நாள் கொண்டாடும் வேளையில் பெண்ணியம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். முதலில் பெண்ணியம் என்கிற புரிதல் எல்லோருக்கும் இருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்லலாம். பெண்ணுரிமைக்காகப் போராடும் பெண்குலத்துக்கு இத்தகைய புரிதல் அவசியம் தேவை. ஆடவர்களுக்கு இதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இலக்கியத் திறனாய்வு முறைகளில் பெண்ணியம் (Feminism) சிறப்பானதொரு பார்வைக் கோணத்தைத் தந்திருக்கிறது. எந்தத் திறனாய்வுக்கும் அதனுடைய பார்வை, கூர்மையும் தெளிவும் கொண்டிருப்பது மிகவும் அவசியம். பெண்ணியம், அத்தகையதொரு கூர்மையைத் தந்திருப்பதோடு, வழக்கமான விளக்கங்களுக்கு மாற்றாகப் (alternative) புதிய விளக்கங்களை பெண்மை என்ற கோணத்திலிருந்து தந்திருக்கிறது. எனவே திறனாய்வுக்கு ஒரு புதிய பரிமாணம் கிடைத்திருக்கிறது.

நவீன இலக்கியத்தை எழுதுவதற்குரிய புதிய தளங்களை அது முன்வைக்கிறது. அதேபோது, வாழ்க்கை நிலையிலுள்ள எதிரும்புதிருமான பிரச்சினைகளின் உண்மைகளைக் காட்டிச் சிந்திக்கவும் தூண்டுகிறது. அண்மைக் காலமாக, குறிப்பாக 1970களுக்குப் பிறகு, தமிழகத்தில் பெண் விடுதலை முழக்கங்கள் கேட்கத் தொடங்கியுள்ளன. அதன் பின்னணியில் இலக்கியத்திலும் பெண்ணியச் சிந்தனை பெருகி வந்துள்ளது.

படைப்பாளிகள் ஆண்களா, பெண்களா என்பது முக்கியமல்ல என்றாலும், பெண் என்ற அடையாளம், பெண் என்ற உணர்வு, பெண் என்ற அனுபவம் நேரடியாக இருக்கும் என்பதால் பெண் எழுத்தாளர்களிடம் பெண்ணியச் சிந்தனையையும் பெண்ணிய மொழியையும்

எதிர்பார்ப்பது என்பது இயல்பே. பெண்ணிய எழுத்து, ஒடுக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகளை வெளியே கொண்டு வர வேண்டும். ஏனென்றால், பெண்ணியம் என்பது, சுயம் பற்றிய உணர்வு, போராட்ட குணம், அடக்குமுறை அல்லது ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஓர் எழுச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இது பேராசிரியர் தி.க.நடராசன் அவர்கள் தமது பெண்ணியம் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

உலகம் முழுவதுமிருந்து 2023 ஆம் ஆண்டுக்கான ஊக்கமளிக்கும் மற்றும் செல்வாக்கு மிகுந்த 100 பெண்களின் பட்டியலை பிபிசி வெளியிட்டுள்ளது. இதில் மனித உரிமை வழக்கறிஞர் அமல் குளூனி, ஹாலிவுட் நட்சத்திரம் அமெரிக்கா ஃபெரெரா, பெண்ணியவாதிகளின் அடையாளமான குளோரியாஸ் டெய்னெம், முன்னாள் அமெ ரிக்க முதல் பெண்மணி மிஷெல் ஒபாமா, அழகுக்கலை தொழில் நிறுவனரான ஹூடா கட்டன், புகைப்படக் கலைஞர் ஆரத்தி குமார் ராவ், கிரிக்கட் வீராங்கனை ஹர்மன் ப்ரீத் கவுர், நடிகை தியா மிர்சா மற்றும் பாலோன் டோர் விருது வென்ற கால்பந்து வீராங்கனை ஐடானா பொன் மேட்டி ஆகியோர் அடங்குவர்.

கடுமையான வெப்பம், காட்டுத்தீ, வெள்ளம் மற்றும் பிற இயற்கை பேரழிவுகள் போன்றவை தலைப்புச் செய்திகளில் ஆதிக்கம் செலுத்திய இந்த வருடத்தில், காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கவும், அதன் தாக்கங்களைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கவும் தங்கள் சமூகங்களுக்கு உதவ உழைக்கும் பெண்களையும் இந்தப் பட்டியல் சுட்டிக் காட்டுகிறது.

ஐ.நா. காலநிலை மாற்ற மாநாடு, COP 28 ஆகியவற்றுக்கு முன்னதாக பிபிசி 100 பெண்கள் பட்டியலில், 28 காலநிலை முன்னோடிகளையும் அடையாளம் கொண்டுள்ளதை பாராட்டியே ஆக வேண்டும்.

பல்வேறு துறைகளில் சாதனைப் பெண்கள் நூறு பேரை அடையாளம் கண்ட பிபிசி நிறுவனம் தமது பட்டியலில் மூன்று இந்திய சாதனை மகளிரையும் இனம்கண்டு சேர்த்துள்ளது. நமக்கெல்லாம் பெருமை அளிக்கிறது.

இக்கட்டுரையில் அவர்களைப் பற்றிய விபரக்குறிப்புகள் மற்றும் அவர்களது சாதனைகளையும் அறிவோம் வாருங்கள்.

## 1. ஆரத்தி குமார்-ராவ், இந்தியா

**புகைப்படக் கலைஞர்**



சுயாதீன புகைப்படக் கலைஞர், எழுத்தாளர் மற்றும் நேஷனல் ஜியோகிராஃபிக்

எக்ஸ்ப்ளோரரர் என பன்முகம் கொண்ட ஆரத்தி குமார் ராவ் தெற்காசியாவைச் சுற்றி பணி புரிகிறார். மேலும் கால நிலை மாற்றத்தால் நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து இவர் ஆவணப்படுத்துகிறார்.

நிலத்தடி நீர், வாழ் விட அழிப்பு மற்றும் தொழில் துறைக்கான நிலம் கையகப்படுத்து தல் ஆகியவை பல்லுயிர் பெருக்கத்தை அழித்து, நிலங்களை சுருங் கச் செய்து, லட்சக் கணக் கானவர்களை புலம் பெயரச் செய்து, உயிரி னங்களை அழிவை நோக்கித் தள்ளுவதை தனது புகைப்படங் களின் வழியாக உல கிற்கு விவரிக்கிறார் ஆரத்தி.

ஆரத்தி ஒரு தசாப் தத்திற்கும் மேலாக இந்திய துணைக்கண்ட த்தை குறுக்கும் நெடுக் குமாக சுற்றி வந்திருக் கிறார். மேலும் அவரது வெளியீடுகள் சுற்றுச் சூழல் அழிவு, மக்களின் வாழ்வா தாரம் மற்றும் பல்லுயிர்களை எப்படி பாதிக்கிறது என்பதை வெளி ப்படுத்துகிறது.

Marginlands: India's Land scapes on the Brink, என்ற அவரது புத்தகம் இந்தியாவின் மிகவும் மோசமான சூழலில் வாழ்பவர் களின் அனுபவங்களை உள்ளடக் கியது.

## 2. ஹர்மன்ப்ரீத் கௌர், இந்தியா

**கிரிக்கட் வீராங்கனை**

இந்த வருடத்திற்கான விஸ்ட னின் ஐந்து கிரிக்கெட் வீராங்க னைகள் பட்டியலில் இடம்பிடித் துள்ளார் ஹர்மன்ப்ரீத். இந்த பட்டி யலில் இடம்பெறும் முதல் இந்திய பெண் கிரிக்கெட் வீரர் ஹர்மன்ப்ரீத் ஆவார்.



இந்திய பெண்கள் தேசிய கிரிக் கெட் அணியின் கேப்டனாக இருந்து உள்நாடு மட்டுமின்றி வெளி நாடுகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துபவர். கடந்த ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுகளில் தனது அணியை வழிநடத்தி சில்வர் மெடல் வாங்குவதற்கு காரணமாக அமைந்தவர்.

உள்நாட்டு கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் அணியை வழி

நடத்தி மார்ச் மாதம் நடைபெற்ற முதல் பெண்கள் ப்ரீமியர் லீக் போட்டியிலேயே வெற்றிபெற செய்தவர்.

2017ம் ஆண்டு நடைபெற்ற பெண்கள் உலகக்கோப்பை அரையிறுதி போட்டியில் 115 பந்துகளுக்கு 171 ரன்கள் குவித்து இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி இறுதி போட்டிக்கு முன்னேறியதற்கு காரணமாக அமைந்ததே இவரின் தொழில்முறை ஆட்டத்தில் திருப்பு முனையாக பார்க்கப்படுகிறது.

## 2. தியா மிர்சா, இந்தியா

**நடிகை**



இந்திய நடிகையான தியா மிர்சா, சினிமாவில் தனது பாத்திரங்களுக்காக விருதுகளை வென்றது மட்டுமல்லாமல், ஏராளமான சுற்றுச் சூழல் மற்றும் மனிதாபிமான திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் திட்ட நல்லெண்ண தூதராக உள்ள தியா மிர்சா காலநிலை மாற்றம், சுகாதாரமான காற்று மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு போன்றவை குறித்து விழிப்புணர்வை மேற்கொண்டு வருகிறார்.

ஒன் இந்தியா ஸ்டோரிஸ்' என்ற தயாரிப்பு நிறுவனத்தை நிறுவி, தாக்கத்தை உருவாக்கும் நம்பிக்கை கதைகளை அவர்களின் சொந்த மொழியிலேயே பேச வைத்து உருவாக்கி வருகிறார்.

சேவ் தி சில்ட்ரன், விலங்கு நலனுக்கான சர்வதேச நிதியம் அமைப்புகளின் தூதுவராகவும், சரணாலயம் இயற்கை அறக்கட்டளையின் குழு உறுப்பினராகவும் இவர் உள்ளார்.

**நன்றி:**

*பிபிசியின் 100 சாதனை மகளிர் தயாரிப்பு குழுவினர், புகைப்படக் கலைஞர்கள் உலகமொழி சேவை*

## பெருமிதம் கொள்

**பெண்ணாகப் பிறந்ததில்**
**பெருமிதம் கொண்டிடு!**
**விண்ணில் நுழைந்து**
**விந்தைகள் புரிந்திடு!**

**கண்ணில் கனல்வீசி**
**கயவர்களை அழித்திடு!**
**எண்ணத்தில் உண்மையை**
**என்றுமே வைத்திடு!**

**திண்ணிய உள்ளமோடு**
**தரணியை ஆண்டிடு !**
**மண்ணில் பிறந்தோமே**
**மாதவம் புரிந்து.**



**–ஜனனி குமார்–**

# ரமழானின்.. இரம்மியம்

–மக்கொலையூரான்–

ஐம்பெருங் கடமைகள் முஸ்லிமுக் குண்டு
ஐம்புல னடக்கத்திற்கான நெறிமுறை யுண்டு

நான்காம் கடமையாய் அமைந்தது நோன்பு
பாங்காய் கொண்டது நல்லற மாண்பு

ஊர் உறங்கும் சாமத்தில் விழித்தெழ வேண்டும்
பார் படைத்த இறையோனைப் பணிந்து தொழ வேண்டும்

ஸஹர் செய்து நோன்பிற்காய் ஆயத்தம் எங்கும்
ஸலாமத்தான வாழ்க்கையின் தாத்பரியம் துலங்கும்

அதிகாலை அதானோடு ஆகாரம் தவிர்ப்போம்
பொன் மாலை அதானோடு நோன்பை நாம் துறப்போம்

இராப் பொழுதில் தராவீஹில் இன்பத்தைச் சுவைப்போம்
இருகரங்கள் ஏந்தியே இறையோனைத் துதிப்போம்

புனிதமான அல்குர்ஆன் தினமோதும் இன்பம்
இனிதான மண்ணறைக்கு அதுதானே பேரின்பம்

சதகாவும் ஸக்காத்தும் பகிர்ந்தளிக்க வேண்டும்
சத்திய நெறி வழியே பிறர் துயர் துடைக்க வேண்டும்

பசியோடு இருப்பது மட்டுமில்லை கடமை
பக்குவத்தை பேணாவிடின் அது பெரும் மடமை

பசியோடு படைத்தவனின் கட்டளைகள் ஏற்று
பயன் பெறுவோம் மகத்தான நோன்பினை நோற்று

நோன்பிற்கு அல்லாஹ்வே கூலி யென்று சொன்னான்
நோன்பாளி வாய் வாடை கஸ்தூரி யென்றும் சொன்னான்

ரய்யான் எனும் சுவன வாசல் நோன்பாளிக் குண்டு
கையேந்திப் பிரார்த்திப்போம் எமக்கும் வாய்க்க வேண்டும்
என்று

பாவங்கள் சுட்டெரிக்க கிடைத்த வரம் ரமழான்
வாருங்கள் பயன் பெறுவோம் விடை பெறுமுன் ரமழான்.




# சமர்ப்பணம்

**கவியின் வாரிசு**

காலம் கடந்தும் சில
சம்பவங்கள் சாதனையாகும்.
அதிலும் அதிசயமாய் சில
சாதனைகள் சமர்ப்பணமாகும்.
இன்றைய எழுத்தில் பிரசுரமாகிறது
நேற்றைய சாதனையின் சமர்ப்பணம்

பரீட்சை, பேச்சு, விவாதம்
எழுத்து, கலை என்று
அவளுக்காய் அடைந்த விருதுகள்
அத்தனையும் எனக்கான
வாய்ப்பென்றால் - இதை நான்
பெற்ற வரம் என்பேன்

கல்லூரித் தாய் மடியின் தாலாட்டு
கனதியாய் கலையும் முன்னே
அறிவிப்பிலும் ஓர் விருது
வரமாய் வந்து வாய்த்ததுவே
அவளுக்கு எந்தன் சமர்ப்பணமாய்

அவளின் ஞாபகமொன்று
வரலாறாய் ஆனதின்று
தரம் ஒன்றிற்கு கால்கோள்விழா
கொண்டாட்டமாம் அன்று
எனக்கோ தரம் இரண்டிற்கு
இடம் பெயர்வு
புதிய பணிப்பாளரின்
முதல் வருகையது
இரண்டாயிரத்துப் பதினொன்றில்
நான் வியந்த மேடையது

அவளின் அவையிலே
அதிதிகளோ அமோகம்
சின்னஞ்சிறுசு நான்
அறிவிப்பாளராய் அறிமுகம்
கச்சிதமாய் ஒப்புவித்தேன் நிகழ்ச்சி
நிரலை மனனமாக்கியே
என்னவளின் மேடையிலே

உலா வந்த காட்சி
கையிலே ஒலி வாங்கியோடு
கலையாத கனவானதே
நின்றும் நிஜத்தின்
நினைவாய் நிழலாடுதே
இன்றும் தெவிட்டாத
தொடர் கதையாய் தொடருதே
இன்னும் பன்னிரண்டு
வருடமாகியும் விருதாய்
பரிணமிக்கிறதே

உந்தன் மேடையில் வளர்ந்த வாரிசு
நான் உனக்காய் ஈன்றெடுத்த
தேசிய விருதுயிது
உன் மேடையில் சன்மானமாய்
சமர்ப்பணமாகிறது

வாரிசுகள் புடைசூழ்ந்து
வாரியணைக்க - கரகோஷங்கள்
கர்ச்சனையாய் எதிரொலிக்க
வருடத்தின் சிறந்த அறிவிப்பாளரை
வரவேற்று வாழ்த்து மழை பொழிந்தாய்

நனைகையிலே நினைக்கிறேன்
நிதமும் நீடிக்கவே
நாட்கள் நகருகையில்
ஓய்வும் நிரந்தரமாகுதே
கண்ணீரும் ஆர்ப்பரிக்க
நிர்க்கதியாய் நிற்கிறேன்
கடைசி வரை தொடருமே
எந்தன் சமர்ப்பணங்கள்

என்னை கல்விக்காய்
கருக் கொண்டவளே
உந்தன் வரலாற்றின் வரைவேட்டிலே
வேர்கொண்ட விழுது நான்
தொடருமே எந்தன் சமர்ப்பணங்கள்

உண்மைக் கதையின் ஓர் அத்தியாயம்

# ரஞ்சி



அப்போது வருடம் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஐந்து. அந்த மரக்கறிச் சந்தையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாய் இருந்த ஆட்களிடம் பேரம் பேசிக் கொண்டிருக்க, இங்கே என் அருகில் இருந்த ஓர் பெண்மணியும் தனக்கு முன்னேயிருந்த இன்னோர் வயதான பெண்மணியிடம் பேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அவரது கைகளில் இருந்த அந்த ஒரு கிலோ வத்தாளங் கிழங்கையும் (சர்க்கரைவள்ளிக் கிழங்கு) எப்படியாவது விற்றுவிட வேண்டுமென்ற ஓர்வித தீர்க்கம் அவரது கண்களில் இருந்ததை என்னால் நன்றாகவே உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனால் அதை விலை பேசிய பெண்மணியோ வேறு சொல்லிக் கொண்டிருந்தார்.

'இங்க பாரணை. நீ போன வாரம் தந்திட்டுப் போன வத்தாளங் கிழங்கே இன்னும் விலைபோகல. இதில என்னால இந்த ஒரு கிலோவையும் வாங்க ஏலாது வேணுமென்டா ஒரு அரைக்கிலோ வாங்கிக்கிறேன். அதுவும் முப்பது ரூபாய் என்டா கொடு. இல்லையென்டா வேண்டாம்..' என்று கொஞ்சம் கறாராகவே சொல்லிவிட்டார்.

எதிரில் நின்றவருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. இதை விற்றால் மட்டுமேதான் அவரின் மகனது வயிற்றினை ஒரு வேளைக்காவது நிரப்ப முடியுமென்ற நிலைமை. அதனால் மீண்டுமாய் அந்த வயோதிபப் பெண்மணியிடம் பேசிப் பார்த்திட ஆரம்பித்தார்.

அப்போது என்னை அறியாமலேயே நான் அவரை உற்று நோக்கத் துவங்கினேன். பார்ப்பதற்கு அவ்வளவொன்றும் வயதானவர் போல் தெரியவில்லை. ஆனாலும் அவரது வாழ்வின் வலி அவரது கண்களில் இழையோடுவதை என்னால் நன்றாகவே காண முடிந்தது. நரை கொஞ்சமாய் எட்டிப்பார்த்திருக்க தளர்ந்திருந்த தன் இரு கைகளிலும் அந்த வத்தாளங் கிழங்குப் பையினை கெட்டியாகப் பிடித்தபடி, மற்றைய பெண்மணியிடம் அவை அனைத்தையும் விற்றுவிடும் முனைப்போடு பேசிக்கொண்டிருந்தார். அவரது அந்த முயற்சிக்கு பலனும் கிடைக்கவே செய்தது.

'...சரியணை நீ இவ்வளவு கேட்கிறதால ஒரு கிலோவையும் ஐம்பது ரூபாய்க்கு வாங்கிக்கிறேன். அதுக்கு மேல ஒரு காசு கூடக் கிடையாது. சரின்னா சொல்லு எல்லாத்தையும் வாங்கிக்கிறேன்...' என்று அவர் இப்போதும் கறாராகவே நிற்க, எதிரில் இருந்த பெண்மணிக்கோ எதையோ சாதித்துவிட்ட மகிழ்ச்சி.

கையில் வைத்திருந்த முழு வத்தாளங் கிழங்கையும் விற்றுவிட்டு அந்த ஐம்பது ரூபாய் தாளைக் கைகளில் வைத்துப் பார்த்தவரின்

கண்களில் லேசாக கண்ணீர்த்துளிகள் எட்டிப் பார்க்கவே செய்தது.

அவரையே அப்படியே பார்த்துக் கொண்டிருந்த நான், அருகாய் சென்று அவரது கையினை இறுக்கமாய் பிடித்துக்கொண்டேன்.

என்னதான் அவரை மற்றவர்கள் எல்லாம் ரஞ்சினி, ரஞ்சி என்று அழைத்தாலும், என்னால் மாத்திரம் அவரை அப்படி அழைத்திட முடிவதில்லை. அதனால் நான் மட்டும் அவரை அழைப்பது, .'..அம்மா..' என்று. என் குரல் கேட்டு என் பக்கமாய் பார்வையைத் திருப்பியவர்,

'என்னப்பன்' என்று கேட்க, 'இல்லையம்மா இன்டைக்கு மீன் ஒன்டும் வேண்டாம். எப்பவும் போல சம்பலே செய்வம். என்றேன்.

சந்தைக்கு வரும் வழியெல்லாம் அவரிடம் மீன் குழம்பு வேண்டுமென்று நச்சரித்தது நான்தான். ஆனால் அந்த ஆசையெல்லாம் அவரை இப்படியொரு நிலைமையில் வைத்துப் பார்த்த போதே காணாமல் போயிருந்தது. ஆனால் அவரோ,

'இல்லையப்பன்...நல்லதாய் சாப்பிட்டு ரொம்ப மாசமாச்சு. இன்டைக்கு சூடையேதும் வாங்கிக் கொண்டு போவம்' என்றவாறே மீன் சந்தையினை நோக்கி நகர்ந்தார்.

ஆம் எனக்குச் சூடையென்றாலோ அவ்வளவு பிரியம். அதுவும் அப்பாவோடு ஒன்றாக அமர்ந்து பச்சையரிசிச் சோற்றில் சூடைக் குழம்பை விட்டு குழைத்துச் சாப்பிடும் போதே அப்படியொரு ருசி மனதையும், வயிற்றையும் ஒரு சேர நிரப்பிச் செல்லும். இது நினைவிற்கு வந்த அதே நேரம் மனம் மேலும் இரண்டு வருடங்கள் பின்னோக்கி நகர்வதை, என்னாலும் ஏனோ தடுத்திட முடியவில்லை.

அப்போது வருடம் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணுற்றி மூன்று. யுத்தம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்த காலப்பகுதி. பாதைகளனைத்தையும் பூட்டிவிட்டார்கள். அதனால் அங்கிருந்து தலைநகருக்குச் செல்ல வேண்டுமென்றால் மூன்று இடங்களில் செக்கிங் எல்லாம் முடித்துச் செல்லவே ஐந்து நாட்களாகவிடும். அப்படித்தான் அன்றொரு நாள் என் அன்னையும் என்னை பக்கத்து வீட்டு அக்காவின் பொறுப்பில் விட்டுவிட்டு ஒரு அவசர வேலையாக தலைநகருக்குச் சென்றிருந்தார்.

சொல்வதற்கு இலகுவாக இருந்தாலும் அந்தக் காலப்பகுதியில் அந்தப் பயணம் நினைப்பது போல் ஒன்றும் இலகுவானதல்ல. சென்ற அன்னை திரும்பி வரும் வரையில் அவர் பற்றிய தகவலை அறிய அப்போது வாட்சப்போ, வைபரோ இருக்கவுமில்லை.

தினமும் வீட்டுப் படலையில் நின்று கொண்டு அம்மாவின் வருகைக்காக காத்துக் கொண்டிருப்பேன். மாலையானால் பக்கத்திலிருக்கும் புளியமரத்து வைரவரிடம் சென்று எல்லாம் நல்லதாகவே நடக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளத் தவறுவதுமில்லை.

இப்படியாகவே ஒரு இருபது நாட்கள் கடந்திருக்க, அன்று நன்றாக உறங்கிக் கொண்டிருந்த நேரம் பக்கத்து வீட்டு அக்கா வந்து என்னைத் தட்டியெழுப்பினார். 'கண்ணா. அம்மா வந்திட்டாங்கடா. போய் பாரு' அவர் கூறியதுமே அடித்துப் பிடித்துக் கொண்டு படலையைத் திறந்து கொண்டு ஓடினேன். அங்கே விறாந்தையில் கண்ணெல்லாம்

குளமாகிப் போயிருக்க அவரிருந்த தோற்றமே என்னை ஏதோ செய்ய, அருகில் சென்று, 'அம்மா…' என்றேன்.

அவ்வளவுதான் என்னை ஓடி வந்து கட்டியணைத்துக் கொண்டவர், அதுவரை அடக்கி வைத்திருந்த மொத்தக் கண்ணீரையும் என்மேல் இறக்கி வைத்துவிட்டார்கள்.

'கண்ணா… உன்ர அப்பா எங்களையெல்லாம் விட்டிட்டு போயிட்டாரு பா' என்று அவர் சொன்ன அடுத்த கணமே என் விழிகளையும் கண்ணீர் ஆக்கிரமித்துக் கொள்ள, அப்பா இறந்தது கூடத் தெரியாது, புளியமரத்து வைரவரிம் அப்பா நலம் பெற வேண்டுமென்று தினமும் வேண்டிக் கொண்டேனே என்றிருந்தது.

ஆம், அன்னையைக் கண்ட மறுகணமே அப்பாவின் உயிர் பிரிந்து விட்டதாம். காரியமெல்லாம் முடித்து அன்னை திரும்பி வரத்தான் இத்தனை நாட்கள். இடையில் அந்தச் செய்தியை அறிவிக்கவும் அந்தக்காலத்தில் எந்தவொரு வசதியும் இருக்கவில்லை. அப்பா திரும்பி வந்துவிடுவார் என்ற நம்பிக்கை எல்லாம் என் கண்ணீரோடே கரைந்து கொண்டிருந்தது.

'என்ர பிள்ளை கடைசியாய் கூட அவனிண்ட அப்பாவைப் பார்க்க கொடுத்து வைக்கலையே…' என்ற அம்மாவின் அழுகையும் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

சில நேரங்களில் சில நிகழ்வுகள்தான் வாழ்க்கையை அப்படியே புரட்டிப் போடும். எனது தந்தையின் இறப்பும் எங்களிற்கு அப்படித்தான் அமைந்து போனது.

ஆனால் என் அன்னையோ கலங்கிப்போய் மொத்தமாய் மூலையில் முடங்கி விடவில்லை. யாரிடமும் சென்று கையேந்தி நிற்கவுமில்லை.


தன்னை மட்டுமே நம்பினார். ஒரு ரூபாய் கூட அந்நாளில் கையில் இல்லையென்றாலும் என்னை அவர் பட்டினி போட்டதில்லை. எத்தனையோ நாட்கள் தண்ணீர் மட்டுமேதான் அவரது வயிற்றை நிரப்பியிருக்கும். ஆனாலும் ஒரு விநாடி கூட ஓய்வெடுக்கவென அமர்ந்ததில்லை.

அவருக்கும் கனவுகள் இருந்திருக்கும். அவருக்குள்ளும் பலவிதமான ஆசைகள் வாழ்ந்திருக்கும். அனைத்தையுமே என் ஒருவனுக்காய் தனக்குள்ளாகவே புதைத்துக் கொண்டார். இன்று என் பெயரின் பின்னால் பல பட்டங்களும், பதவிகளும் வரிசை கட்டி நிற்கின்றது. ஆனால் இத்தனையும் எனக்குக் கிடைப்பதற்காய் அந்த புழுதி படிந்த சாலைகளில் கால்கள் தேயத் தேய ஓடி ஓடி உழைத்தவரும் அவர் மட்டுமேதான்.

கடந்த காலத்தின் நினைவுகள் அனைத்தையும் மீண்டுமொரு முறையாய் மீட்டிப் பார்த்துக்கொண்டே கண்களிலிருந்த துளிகளைத் துடைத்துக் கொண்ட நான், வெளியே தன் பேரப் பிள்ளைகளோடு சிறு பிள்ளையாய் தானும் மாறி விளையாடிக் கொண்டிருந்த என் அன்னையோடு சென்று இணைந்து கொண்டேன். அப்போது அவரது முகத்தினிலிருந்த மகிழ்ச்சியே என் வயிற்றையும், மனதையும் முழுவதுமாய் நிரப்பிட போதுமானதாய் இருந்தது.

**–அன்புடன் சகி–**

# பெண்ணுரிமை போற்றுவோம்!



காரேறிய முகில்
காவியம் பாடட்டும்!
நீரேறிய விழிகள்
நிறைமதி ஆகட்டும்!

போரேறிய வாழ்க்கையில்
போராடும் பெண்ணே!
பாரேறிடு பார்போற்ற
புகழ் மேவிடு!

தேரோடிய வீதியில்
தெரிவைநீ ஓடுகின்றாய்!
வேரோடிய வேதனைகள்
தீராத நெஞ்சோடு

ஊரோடும் உறவோடும்
ஊசலாடி நிற்கின்றாய்
தாரோடிய வாழைபோல்
தாங்கொணாத பாரமேற்றி

மருளோடும் அயர்வோடும்
கரைதேடி ஓடுகின்றாய்
அருளோடும் நெஞ்சமில்லை;
ஆதரவுக் கரங்களில்லை

பொருளோடு வந்தால்தான்
பொருளாகத் தெரிகின்றாய்
மருதோன்றிப் பசுமையாய்
முகமாரச் சிரிக்கின்றாய்.

அதுதரும் சிவப்பாக
உளமாரச் சிவக்கின்றாய்
எதுசொன்னால் நீமாறி
எரிமலையாய் வெடித்திடுவாய்?

எதுஉந்தன் பிறப்புரிமை
உணர்ந்துவிட்டால் உருப்படுவாய்
பதுமையல்ல பெண்ணேநீ
பிணிதீர்க்கும் மருந்தன்றோ?

தேவார்ந்த தேவரெலாம்
போற்றுகின்ற சக்தியன்றோ?
பூவார்ந்த பொன்மனதை
கல்லாக்கிடு சிலநேரத்தில்

நாவார்ந்த மொழியாலே
உறைக்கும்படி பேசிவிடு!
காவார்ந்த பொழிலாக
மாறட்டும் உன்வாழ்க்கை
வாழ்ந்துவிடு!

**முனைவர் கிருட்டிணதிலகா**
போரூர்
சென்னை -600125



# பிறழ்ந்த உறவு

மனதினுள்ளே ஊசியாய் குத்தும் வலியைத் தாங்கிக் கொண்டே தன் வேலையில் கவனமாயிருந்தாள் டொக்டர் சாஹிதா. குண்டுக் கண்களை விரித்து, சிறு பயத்தை தேக்கி, தன்னைப் பார்த்த அந்த நாலு வயதுச் சிறுமியைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்தவாறே, ஸ்டெதஸ் கோப்பை அதன் மார்புப் பகுதியில் வைத்துப் பரிசோதித்தவள், அவள் கன்னத்தில் மென்மையாய் தட்டி விட்டு, தன் கையில் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தில் குறித்தபடி, அடுத்த கட்டிலை நோக்கி நகர்ந்தாள் அவள்.

அந்த சிறுவர் வோட்டில் வரிசையாய் இருந்த சிறுவர்களைப் பற்றிய குறிப்புகளை அவர்களைப் பரிசோதித்து குறிக்க வேண்டியிருந்தது. ஐந்து வருட வைத்தியப் படிப்பை முடித்து விட்டு, இப்போது இன்டர்ன் ஸிப்பில் அந்த வைத் தியசாலையில் சிறுவர் வோர்டில் பணி புரிகிறாள். அங்கிருந்த குழந்தைகளைப் பார்க்கும் போது அவளுக்குள் ஓர் இறுக் கமான உணர்வு .

அவள் மதியம் வரை வேலை செய்து விட்டு, தனக்கென ஒதுக்கப் பட்டிருந்த அறைக்குள் வந்து கோர்ட்டைக் கழற்றி கொழுவிவிட்டு, பாத்ரூமுக்குள் நுழைந்து நன்றாக முகத்தை அழுந்தக் கழுவி விட்டு வந்து, துவாலையால் முகத் தைத் துடைத்தபடி, ஜன்னலோரமாய் நகர்ந்து போய் நின்று கொண்டாள். அந்த வைத்தியசாலை கடற்கரையோரமாக அமைந்திருந்தது. அதிலும் அந்த அறை கடற்கரைப் பக்கமே இருந்தது. மனம் கனத்திருக்கும் வேளைகளிலெல்லாம் அவள் அந்த வங்கக்கடலை வெறித்துப் பார்த்தபடி நிற்பது வழக்கம் தான்.

காலையில் உம்மம்மாவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்திருந்தது.‘சாஹிம்மா. ஹிமா பெரியாளாகிட்டா புள்ள...’

அவளால் இதனை எப்படி எடுத்துக் கொள்வதென்று புரியவில்லை. எந்த விதமான உணர்ச்சி வெளிப்பாடும் அவளுக்குள் உருவாகவுமில்லை. இத்த னைக்கும் ஹிமா அவளது வயிற்றில் பிறந்த குழந்தை. இவள் எனக்கு மகளா? தங்கையா? பதின் மூன்று வருடங்களாகியும் இன்னும் அவளுக்கு இந்தக் குழப்பம் தீரவேயில்லை. இந்தக் குழப்பம் அவள் வாழ்வு முழுமைக்குமே தீராது என்பதனை எண்ணும் போது அவள் விழிகள் நிறை ந்தன.

அவளுக்கு அப்போது பதினான்கு வயது. பத்தாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். மிக மிக நன்றாகவே படிப்பாள். ஆனால் குடும்ப சூழ்நிலைதான் அவளுக்கு எதிரியாக இருந்தது. ஏழ்மை அங்கே கோலோச்சிற்று. கூலி வேலை செய்யும் தந்தை குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தார். கூடவே போதை வஸ்துகளின் பாவனையும் இன்னும் இன்னும் ஏழ்மை நிலைக்கே அந்தக் குடும்பத்தை தள்ளிக் கொண்டிருந்தது. அப்பாவித் தாய்க்கோ தந்தை செயலை எதிர்க்கத் தெரிந்திருக்கவில்லை. இவளுக்குப்

பின்னே இரண்டு பெண் பிள்ளைகள். வயிற்றில் இன்னொன்றை சுமந்து கொண்டிருந்தாள் தாய்.

ஒற்றைப் படுக்கையறை வீடு அது. போதையில் வரும் தந்தைக்கு பருவவயதில் இருந்த மகளும் கூட காமத்தை தணிக்கும் கன்னியாகவே தெரிந்தாள். ஆண் பெண் சேர்க்கை பற்றி அறியாத வயதிலேயே சாஹிதாவின் பெண்மை தந்தையாலேயே பறிக்கப் பட்டதில் அதிர்ந்து போனாள் அவள். கையாலாகாத தாயின் கண்ணீர் வழியும் வேண்டுகோளுக்கிணங்க யாரிடமும் சொல்ல முடியாமல் தனக்குள் இறுகிப் போயிருந்தாள் சாஹிதா. நான்கு மாதங்கள் கழிந்த நிலையில் இவளுக்கு அடுத்த, பன்னிரெண்டு வயதான தங்கை சஹானா தந்தையின் கொடூர செயலுக்கு பலியாகும் தறுவா யில், அவரிடமிருந்து தப்பி வெளியே ஓடிக் கதறியதில் விடயம் பொலீஸ் வரை போயிற்று.

அந்த விசாரணையின் போதுதான், சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளால் சாஹிதாவும், சஹானாவும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது சாஹிதா நான்கு மாத கர்ப்பினி என்பது கண்டு பிடிக்கப்பட்டது. பதினான்கே வயதான அந்தக் குழந்தைக்கு தான் கர்ப்பம் ஆகி இருந்தது கூடத் தெரிந்திருக்கவில்லை என்பதே பரிதா பம். நீதிமன்ற விசாரணைகளின் பின் சாஹிதா அடுத்த ஊரில் இருந்த அவளது உம்மம்மாவிடம் ஒப்படைக் கப்பட்டாள். தந்தை சிறையில் அடைக்கப்பட்டார். ஆறுமாதங் களின் பின் ஹிமா பிறந்தாள்.

சாஹிதா மருத்துவப் பரிசோ தனைக் காக அந்த மருத்துவமனையில் தங்கி யிருந்த போது அறிமுகமான வர்தான் டொக்டர் ஹாஜரா. ஐம்பது வயதை எட்டியிருந்த அவர் ஒரு விதவை. பிள்ளைகளும் அவருக்கு இல்லை. பால்வடியும் முகத்துடன், அழகேயுருவான சாஹிதாவின் நிலை அவரைக் கவலைக்குள்ளாக்கியது. அவளது புத்திசாலித்தனம் அவரை யோசிக்க வைத்தது. சாஹிதாவின் உம் மம்மாவிடம், ஹாஜரா அவளது எதிர் காலத்தைப் பற்றி பேசினார். குழந் தை பிறந்ததும் உம்மம்மாவிடம் ஹிமாவை ஒப்படைத்து விட்டு, சாஹி தாவை அந்த சூழலை விட்டு அகற்றி வேறொரு பெரிய நகரத்தில் விடுதியில் தங்கி படிக்க வைக்கும் தீர்மானத்தை இருவரும் சேர்ந்து எடுத்தார்கள். அதற்கான முழுப் பொறுப்பையும் தான் எடுப்பதாக டொக்டர் ஹாஜரா வாக்குக் கொடுத் திருந்தார்.

அதன்படியே சாஹிதா குழந்தை பிறந்ததும், குழந்தையிடமிருந்து பிரிக் கப்பட்டு விடுதியில் சேர்க்கப்பட் டாள்.

உண்மையில் குழந்தையான சாஹி தாவுக்குமே அந்த வயதில் குழந்தை மேல் ஒரு வெறுப்பே வளர்ந்திருந்தது. தந்தை மேல் ஆத்திரம், தாயின் கையா லாகாத் தனத்தின் மீதான வெறுப்பு, வேண்டாத சுமையாய் வயிற்றில் உதித்த சிசு மேல் உண்டான எரிச்சல் எல்லாமே அவளின் உணர்வுகளில் சில வேறுபாடுகளையும் தோற்றுவிக்கத் தவறவில்லை. டொக்டர் ஹாஜ ராவின் வழிகாட் டலும், பராமரிப்பும் கூட சாஹிதாவின் மனநிலையை ஓரள வுக்கு நல்லவிதமாக மாற்றியிருந்தது.

டொக்டர் ஹாஜராவின், இடைவிடாத அறிவுரையும், காட்டிய அன்பும் சாஹிதாவுக்கு தான் படித்து முன்னேற வேண்டும் என்கிற உத்வேகத்தை அளித்தது. இன்று அவள் டொக்டர் சாஹிதாவாக உயர்வதற்கு டொக் டர் ஹ ா ஜ ர ா வி ன் ப ங் க ளி ப் பு அதிகமாகவே இருந்தது

.

சாஹிதாவின் தாய்க்கும் ஹிமா பிறப்பதற்கு இரண்டு மாதங்களின் முன்னர்தான் ஒரு ஆண் குழந்தை பிறந்திருந் தது. சாஹிதாவின் நிலைக்கு தானும் ஒரு காரணமாகி இருந்ததை உணர்ந்த தாய் ஹிமாவை தன் பாதுகாப்பில் எடுத்ததில் இரட்டைக் குழந்தைகளாய் அவர்கள் வளர்ந் தார்கள். ஹிமாவைப் பொறுத்தவரை சாஹிதா மூத்த ராத்தாதான். சாஹிதா அந்த சம்பவத்துக்குப் பிறகு அவளது வீட்டுக்கே போவதில்லை. உம்மம் மாவின் வீட்டுக்குப் போகும் போது எப்பவாவது அவளது சகோதரிக ளையும், ஹிமாவையும் பார்ப்பாள். அவ்வளவுதான். ஹிமாவுடனான உறவு வெறும் ஒப்புக்கானதாகவே இருந்ததே அல்லாமல் அவளால் ஹிமாவை தன் மகளாய் ஏற்றுக் கொள்ள இன்னுமே இயலவில்லை. அவளை நினைக்கும் போது மனது கனத்துப் போகிறது. வாழ்நாள் துயரமாய் அவளை வாட்டி வதைக் கிறது..

ஜன்னல் கம்பியைப் பிடித்திருந்த கரம் இறுகிப்போயிற்று. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. வாழ்நாள் முழுவதும் அழிந்துபோகாத இந்தத் துயரத்தை ஏற்படுத்திய தந்தையை இன்னுமே மன்னிக்க முடியவில்லை. சிறையில் இருந்த போதே இருதய நோயினால் தந்தை இறந்து போன போது கூட அவள் பார்க்கப் போகவில்லை. மகிழ்ச்சியாய் பறக்க வேண்டிய இளமைப்பருவத்தில், சிறகொடிக்கப்பட்ட பறவையாய் மற்றவர்களின் கேலிப் பார்வைக்கும், பரிதாபப் பார்வைக்கும் இலக்காகி கூனிக் குறுகி நின்ற பொழுதுகளை எண்ணும் போது இன்னும் இதயத்தின் ஓரம் வலிக்கிறது.

தோளில் படிந்த கரம் அவளைத் திருப்பிற்று. அவளது அறையைப் பகிர்ந்து கொண்டிருந்த தோழி பர்ஸானா, அவளது கண்ணீர் வழிந்திருந்த முகத்தைப் பார்த்து விட்டு

‘ஏய்...என்னடி ஆச்சு..’ என்றாள் பதட்டமாய். கண்ணீரைத் துடைத்த படியே, இதழ்களில் விரக்திச் சிரிப்பு படர ‘ஹிமா பெரியாளாகிட்டாளாம்..’ என்றாள் சாஹிதா ...

பர்ஸானாவின் விழிகள் சாஹிதாவைப் பரிதாபத்துடன் பார்த்தன. இவளால் இந்தத் துயரத்தில் இருந்து மீளவே முடியாது என்று தோன்றிற்று அவளுக்கு. இந்த இருபத்தெட்டு வயதில் பதின்மூன்று வயதுப் பெண்ணின் தாயாக அவளை கற்பனை பண்ணிப் பார்க்க முடியாது போனாலும், அது தான் நிஜம் என்பது புரிந்தபோது பர்ஸானா கண்கள் நிறைந்திருக்க, சாஹிதாவை மார்போடு சேர்த்து அணைத்திருந்தாள். போதைக்கு அடிமையான ஒரு தந்தையின் தவறு அவன் பெற்ற பிள்ளை யின் வாழ்க்கையை மட்டு மல்ல, அவனது வாழ்க்கையையும் அழித்து விட் டதை என்னென்பது.

**மூதூர் சுஸானா முனாஸ்**



# பெண்ணின் பெருமை

பெண்கள் நாட்டின் கண்கள் என்பது முதுமொழி. பொதுவாக பெண்களின் குணங்களின் வெளிப்பாடு அச்சம், மடம், நாணம் ,பயிர்ப்பு எனும் நான்கு விசேட குணங்களை பிரதிபலிக்கும். கண்ணகி, சீதை காலத்திலிருந்து இன்றைய கலிகாலம் வரையிலும் பெண்கள் தம் பெருமை காத்து நிற்கும் வண்ணம் வாழ்ந்துவருகிறார்கள்.

பெண் என்பவள் அடுப்பங்கரை தாண்டி விண் வெளிக்கு செல்பவளாக, விஞ்ஞான தொழிநுட்ப மாற்றங்களை ஏற்று நவீன உலகை வென்று தொடர்ப வளாக இருக்கிறாள்

இந்த உலகில் பிறக்கின்ற உயிர்கள் யாவும் பெண் செய்யும் தியாகத்தின் வழியே உயிர்ப்பெறுகிறது. இல்லையென்றால் உலகில் உயிர்களே இருக்காது. இந்தவகையில் மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகள், பறவைகளிலும் கூட தாய்மையின் வடிவமே தெரிகிறது.

ஆதலினால் பெண்மையின் வடிவமே அன்புதான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அன்பினால் தம்மோடு வாழ்கின்ற வர்களையும் அரவணைத்து, புத்திமதி சொல்லி அனை வரையும் நல்வழியில் இட்டுச்செல்கிறாள்.

பெண்களை இறைவன் உடலளவில் மென்மையாக படைத்திருந்தாலும் மனதளவில் மிகவும் வலிமையானவர் களாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனை துன்பங்கள் வந்தபோதும் போராடி வெற்றிகொள்ளும் வகையில் செயற்படுபவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். தன் துன்பங்களை பொருட்படுத்தாது தன் குடும்பத்திற்காக மனத்திடத்துடன் உழைத்திடும் தன்மை வாய்ந்தவர்கள். தன் துணையை இழந்தாலும், துணையை விட்டு பிரிந்தாலும் தன் குழந்தைகளை சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வழிசமைப்பாள். இந்த சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் பெண்களைப் போற்றி வாழவேண்டும். ஆகவே பெண்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டியது அவளை சுற்றியுள்ள நம் ஒவ்வொருவரினதும் விசேட கடமையாகும்.

பாரதியார் கண்ட கனவுபோல் இந்த சமூகமானது நல்ல நிலைதனை அடைந்துகொள்ள வேண்டுமானால் பெண்களால் மேன்மை அடைகின்ற ஒரு சமூதாயம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஒரு பெண் தாயாக, சகோதரியாக ,தாரமாக,தன்னிலை உணர்ந்து செயற்பட்டு "பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாக்கப்பெறின்" எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க பெருமையடைகிறாள்.



**நிற்றா.இராசலிங்கம்**
**உடுவில்.**

# அவளும் பெண்தானே

நாற்பதைக் கடந்தால்
நங்கையர்களென்ன கல்லா ?
விருப்புகள் வெறுக்க
விதியென்றா சொல்வீர் ?

அன்றைய ஞாபகங்கள்
அருமையான பொக்கிஷங்கள்
அடிமனதில் ஒட்டிவைத்த
அஜந்தா ஓவியமாய்

உள்ளுக்குள்ளே கிடந்து
புழுங்கியே புரண்டாலும்
சொல்லுக்குள் ஏன்
சூடேற்றிக் கொல்கிறீர்

ஈர் இருபதிலே
இரட்டிப்பாய்ச் சுரக்குமந்த
ஓமோனின் உயிரோட்டம்
ஓங்கியே நிற்க

தெரிந்தும் பலரிங்கே
தேளாகக் கொட்டுவதும்
தெருவோரம் தள்ளுவதும்
திறம்தானா சொல்லுங்கள்

இப்போதெல்லாம்
தெரியாமலேயே மறந்துவிடுகிறீர்கள்
தேவதைகள் பலரின்
தேங்கிய கனவுகளை
தெரிந்து எப்போது
தீர்த்துவிடப் போகிறீர்கள்

காலவோட்டத்தில்
எவ்வளவு தூரம் ஓடினாலும்
உங்களையே சுற்றிவரும்
உயிருள்ள பொம்மைகளாக

உங்களைச் சுமந்துகொண்டே ஓடும்
எங்களுக்கு நீங்கள்
இனித்துக்கொண்டே இருக்கிறீர்கள்
உள்ளீடற்ற கவிதை
நல்லாற்றல் கொள்வதில்லை
மென்னாற்றல்
வன்னாற்றலை விழுங்கிவிடுகிறது


மீண்டும்
உங்களின் சிரிப்பின்மீது
சவாரி செய்வோமா தெரியவில்லை
எங்களுக்கு

எங்களைச் சிறிதுகாலம் கழுகாக
மாற்றிக் கொள்கிறோம்
காதலிருந்தால் கரங்களை நீட்டுங்கள்
அன்றேல் மரணம் அழைத்தால்
மாலையிட்டாவது வழியனுப்புங்கள்

**கவிமகள் ஜெயவதி**



# பெண்ணென்ற பெயரில்



கற்போடு இருக்கிறாள்
என்பதை காட்டிக் கொள்ள
மாதாமாதம் தெரிந்தே
மரணத்தின் வாயிலுக்கு
போய் வரும் உயிரிக்கு
பெண்ணென்று பெயருண்டு.

முதல்தடவைகளில்
விழாவெடுத்துக் கொண்டாடி
பின்னர் தீட்டென்று
ஒதுக்கி வைக்கும்
இந்த சமூகத்தின் மத்தியில்
அவள்களின் அந்த
மூன்று நாட்களின் வேதனையென்பது
வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

இடுப்புகள் நொறுங்கிப் போய்
அடிவயிற்றுக்குத்துகளில் துவண்டு
நொடிக்கொருமுறை பயத்தோடு
ஆடைகளை சரிபார்த்து
கால்கள் பிணைந்து
ஒவ்வொரு நரம்புகளும் இழுத்து
அத்தனை ரணங்களையும்
சிறு புன்னகையில் மறைத்து
அன்றாட வேலைகளை
அந்த வேளைகளிலும்
சலிப்பின்றி செய்து வாழுமவள்
ரத்தமும் சதையுமாய்
உங்கள் கண்முன்
நடமாடுமொரு சுமைதாங்கி

அடுத்த பிறப்பிலாவது
ஆணாக வேண்டும் என்ற
அப்பாவித்தனமான
ஆசைகளை கொண்டு
காலமோட்டிடும் அவளின்
பெரும் எதிர்பார்ப்பெல்லாம்
தன் தலைவருடிட ஓர் கையும்
யாவும் சரியாகி விடுமென கூறி
ஆசுவாசப்படுத்தும்  பேச்சுக்களும்
சிறிது ஓய்வும் மட்டுமே

வயதுக்கு வந்ததிலிருந்து
காயங்களோடும் கண்ணீரோடும்
பின்னிப் போகும் அவள்
வாழ்க்கைச் சக்கரத்தில்
நீங்கள் அவளை
குழந்தையாக பார்க்காவிடினும்
அடிமையாக நடத்தாதீர்கள்
பெண்மையை போற்றாவிடினும்
தூற்றாதிருங்கள். பாவம் அவள்!
வலிகளோடு வாழப் பழக்கப்பட்டவள்

சோதிகா.ரெ
(ஆகிஷா)



# வெந்து தணிந்தது ஆசை

பெண்ணொருத்தி நீதிக்கு
பெருந்திரளாய் கூடிநின்று
நிமிர்ந்த நன்னடையும்
நேர்கொண்ட பார்வையும்
பதாகைகள் தாங்கிய கைகளுமாய்
பெருங்குரலெடுத்து நீதிக்குக்
குரல் கொடுக்கும் தேவதைகள்
வீரமுழக்கமிட்டு வீதிகளில்
வலம்வந்து எதிர்ப்பினைக் காட்டி
புதுமைப் பெண்ணாகப்
புரட்சிகள் பேசி
வீட்டிற்குள் வந்ததும்
வாடிக்கையான வாழ்க்கை
நித்தம் வேடிக்கையானது
உரிமைகள் கழற்றி
ஆணியில் மாட்டி
உழன்றிடும் மாயமென் சொல்வேன்
பாரதி!
என்று கிடைத்திடும்
பெண்ணுக்கு நீதி?!

**புதுகை ஆதீரா**



# களிமண் வனம்

யானை சரியாக
வரவில்லையெனக் குதிரையும்
அதுவும் சரியில்லையென
சிறுத்தையுமானது

புள்ளிவைத்து அழிக்கப்பட்ட மான்
சிறுத்தைக்கு வரைந்த
புள்ளிகளில் மானும்
யானையின் கண்களும் மிச்சமிருக்க

இப்பொழுது களிமண் வனமாகின்றன
சிறுமியின் விரல்கள்!

**ரகுநாத் .வ**
மதுரை

# வெண்பா

**சொல்லுதற் கேளது**
**சொற்புரியா போனாலே**
**உள்ளுள் உளந்தெளியா**
**ஓடாதே நில்லுநீ**
**பல்முறை கேளந்த**
**பாடம் புரியட்டும்**
**வெல்லுவாய் வெற்றி**
**யினை!**

---

**வேண்டுவர் வேண்டாதார்**
**வேண்டாமே பேதமது**
**தூண்டுவோர் சொன்னாலும்**
**தாண்டாது தர்மத்தை**
**ஆண்டாளே மாண்பில்**
**அறிவுசார் பண்பாகும்**
**தீண்டா ஒருதலை**
**தீது!**

–பொன்மணிதாசன்

# சமையல்



## முருங்கையிலை சூப்

**தேவையானவை**

முருங்கையிலை 2 பிடி (காம்புகளையும் வெட்டி பயன்படுத்தவும்)
மைசூர் பருப்பு 2 மே.க
அளவான தக்காளி 1
உப்பு, மிளகு, சீரகம் தூள் சுவைக்கேற்ப
மஞ்சள் தூள் 1/8 தே.க
இஞ்சி, பூண்டு விழுது 1 தே.க
தேங்காய்ப் பால் 2 மே.க (விரும்பினால்)

பருப்பையும், தக்காளியையும் அவித்து மசித்து, தேங்காய்ப் பால் தவிர அனைத்தையும் சேர்த்து கொதிக்க விட்டு, கடைசியாக தே.பால் சேர்த்து கொதித்ததும் இறக்கி விரும்பினால் ஒரு மே.க எண்ணெயில் நறுக்கிய வெங்காயம், சீரகம், கடுகு போட்டு தாளித்து கலந்தால் ஆரோக்கியமான சுவையான சூப் ரெடி!

## திடீர் விருந்தாளிகளுக்கு சுவையான மொறுமொறு பக்கோடா

**தேவையானவை**

கோதுமை மா 250 கிராம்
பட்டர் 1 மே.க (விரும்பினால்)
உப்பு, மிளகாய் தூள் சுவைக்கேற்ப
சூடாக்கிய எண்ணெய் 1 மே.க
பொரிக்க எண்ணெய்

மாவுடன் அனைத்துப் பொருட்களையும் கலந்து, ரொட்டி பதத்தில் பிசைந்து, மெல்லிசாக உருட்டி சிறு துண்டுகளாக வெட்டி, எண்ணெய் காய்ந்ததும் பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.

## டிப்ஸ் டிப்ஸ்

ஒரேன்ஜ் பழத்தோல்களை சிறுதுண்டுகளாக நறுக்கி, அவித்து (நீரை வடித்து போத்தலில் போட்டு வீட்டில் ஸ்ப்ரே பண்ணலாம்) சுவைக்கேற்ட சீனி சேர்த்து பாகுப்பதம் வருகையில் ஆறவிட்டு, ஒரு கண்ணாடி போத்தலில் போட்டு வையுங்கள்! வெந்நீரில் ஒரு ஸ்பூன் போட்டுக் கலக்கி ஒரேன்ஜ் டீ செய்து குடித்தால் சுவையாக இருப்பதுடன், தொண்டைவலி, சளித் தொல்லை நீங்கும்.




பிரான்ஸிலிருந்து தமிழ் முழங்கும்
தமிழ்நெஞ்சம்
படியுங்கள்...
பகிருங்கள்...
இணையத்தில் படிக்கலாம்
tamilnenjam.com
முற்றிலும் இலவசம்
நீங்களும் எழுதலாம்
e-mail : editor@tamilnenjam.com
9 772719 252001